[illegible]

மலர் 8. இதழ் 2

Feb 1935

JC
R673m211, N28
M35.8.2.
187103

1240

M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 8—No. 2.

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | பவ ஆண்டு மாசித் திங்கள்<br>1935 ௵ பிப்ரவரி௴ | இதழ் ௨ |
|---|---|---|

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சைவர் மகாநாட்டுத் தலைமை உரை ... ... | ௬௫ |
| சைவ மங்கையர் மகாநாட்டுத் தலைமை உரை ... | ௭௭ |
| சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைமை உரை ... | ௮௫ |
| நல் வரவேற்பு ... ... ... | ௧௦௪ |
| சமாஜ 30-ம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள் ... | ௧௦௬ |
| சமாஜ விழாவில் நிறைவேறிய தீர்மானங்கள் ... | ௧௦௮ |
| திருவண்ணாமலையில் அடுத்த ஆண்டு விழா ... | ௧௧௦ |
| திருவெம்பாவை வகுப்பு ... ... | ௧௧௦ |
| நன்றியறி வாழ்த்து ... ... ... | ௧௧௧ |
| வாழ்த்துப் பா ... ... ... | ௧௧௨ |
| சித்தாந்த சாத்திரம் ... | ௧௭௭ - ௧௮௨ |

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A., L. T.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் சார்பில் தைப்பூச நன்னாளன்று (20-1-1935) திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் "சிவப்பிரகாசம்" பாடமாகத் தொடங்கப்பட்டது. திரு. பிள்ளையவர்கள் மிகுந்த ஆராய்ச்சித் திறமையோடும் நிறைந்த அன்போடும் சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் என்ற முதல் வழி சார்பு நூல்களின் பெயர்களுள் ஒன்று போதமெனவும் ஒன்று சித்தியெனவும் ஒன்று பிரகாசம் எனவும் இருப்பதன் நுட்பத்தை விளக்கிக் காப்புச் செய்யுட்கு உரை கூறினார்கள். இதுவரை அச்சிடப்பெறாது இப்போது நமது சமாஜத்தால் வெளியிடப்பட்டுள்ள சிந்தனையுரையின் உயர்வைப் பாராட்டி அதிலுள்ள சில அருமைகளை விளக்கினார்கள். பிறகு 27-1-35, 3-2-35-ல் இவ்வகுப்பு நடத்தப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 8-மணி முதல் 9 மணி வரையில் இவ்வகுப்பு இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகாநந்த நிலயத்தில் நடைபெறும். அன்பர்கள் வருக.

## பெரியார் பிரிவு

நமது சமாஜத்தில் பல ஆண்டுகளாக உதவித் தலைவராகத் தொண்டாற்றியவரும், சமாஜ வகுப்பாகத் தமது இல்லத்தில் சிவஞான சித்தியார் சுபக்கத்தை, திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்களைக்கொண்டு மூன்றாண்டுகள் பாடம் சொல்லிவைத்தவரும், சிறந்த அன்பருமாகிய திரு. பி. எஸ். ஐயாமுதலியாரவர்கள் 18—1—1935-ல் சிவபதமடைந்த செய்தியை மிக வருத்தத்தோடு தெரிவிக்கிறோம்.

2. திருவிழாவில் சமய போதனை செய்யும் முறையை யொட்டி, திருவொற்றியூரில் நடைபெறும் திருவிழாவில் (16-2-35) மகிழடி சேவைத் திருவிழாவன்றும் அடுத்த நாட்களிலும் நமது சமாஜக் கூட்டங்கள் திருவொற்றியூர் ஆலயத்தில் நடைபெறும். அன்பர்கள் வருக.

3. நமது சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற திருவோத்தூர் ஸ்ரீ வாகீசபக்தஜன சபையினர் இவ்வாண்டிலும் திருவிழாவில் பத்து நாட்களிலும் பல பேறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் செய்வித்துச் சமயபோதனை நடத்தியது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், எஸ். வையாபுரிப் பிள்ளை. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார், புரிசை முருகேச முதலியார் முதலிய பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு"


| | | |
|---|---|---|
| மலர் அ | பவ ஆண்டு மாசித் திங்கள்<br>1935ஆம் பிப்ரவரி மீ | இதழ் உ |


## தலைமை உரை

[திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

(தொடர்ச்சி)

சிவத்தை வழிபட ஒருவன் புகுகிறான். சிவமோ, தன்னை வழிபடப்புகும் ஒருவனையும் பிறவுயிரையும் தொடர்புபடுத்தியிருப்பது. அச்சிவத்தை எப்படி வழிபடுவது? ஒருவன் தன்னைப் பிறவுயிர்களினின்றும் வேறுபடுத்திச் சிவத்தை வழிபடப்புகுவானாயின், அவனது வழிபாடு துவிதத்தின்பாற்படுவதாகும். துவிதவழிபாடு பிறவித்துன்பத்தைப் போக்காது. தன்னிடத்தும் பிறவுயிரிடத்தும் விளங்குவது சிவமேயாதலால், தன்னையும் பிறவுயிரையும் வேறுபடுத்தாது, அதாவது கூறிடாது, அவன், சிவத்தை வழிபாடு செய்தல்வேண்டும். இதுவே அத்துவித வழிபாடு எனப்படும். அத்துவிதவழிபாடு பிறவித் துன்பத்தைப் போக்கும். 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை' என்பது அப்பர் அருண்மொழி.

மதவாதிகள், துவிதம் என்றும் அத்துவிதம் என்றும் உலகை மருட்டுவது வழக்கம். அம்மருட்டல்கண்டு அன்பர்கள் மலைவுற வேண்டுவதில்லை. துவிதம் பிரிவை உணர்த்தலால்,

அது சகோதரநேயத்துக்குத் தடை செய்வது. அத்துவிதத்தில் பிரிவின்மையால், அது, சகோதர நேயத்துக்கு இடந் தருவது. சகோதரநேயத்தை அத்துவிதமென்றும், மற்றதைத் துவிதமென்றுங் கொள்க.

ஒருவன், தன்னைப் பிறவுயிர்களினின்றும் வேறுபடுத்தாது, இரண்டு சார்பிலும் ஒன்றித் தொடர்பு கொண்டுள்ள சிவத்தை வழிபடுவதென்பது, தன்னைப்போலப் பிற வுயிரையுங்கொண்டு வாழ்வதாகும். இதுவே சகோதரநேயம் என்பது. தன்னிலும் பிற உயிரிலும் உள்ளது சிவம் என்று உணரும் எவனும், தன்னைப்போலவே பிறவுயிரையுங் கருதுவன்; எவ்வுயிர்க்குந் தீங்குசெய்யான்; நலமே செய்வன். எவ்வுயிரையும் தன்னைப்போல் கருதித் தீங்கு செய்யாது நலஞ்செய்வது சகோதரநேயத்தின் இயலாகும். இதுவே சிறந்த சிவவழிபாடு. 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின், தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே' என்றார் தாயுமானார்.

'கூற்றாயினவாறு' என்னுந் திருப்பாட்டை நோக்குவோம். 'கொடுமைபல செய்தல்' என்பது அப்பர் தம்மையும் பிறவுயிரையும் வேறாகக் கருதியதை உணர்த்துவது. வேற்றுமைக் கருத்து எல்லாக் கொடுமைகட்குங் காரணமாக நிற்றலான், அதன் பயனைக் 'கொடுமைபல' என்றார்; தம்மையும் பிறவுயிரையும் வேறாக நினைத்தது அறியாமையாதலின், 'யான் அறியேன்' என்றார். 'தோற்றாதென் வயிற்றின் அகம் படியே குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன்' என்பது கொடுமையின் விளைவு அல்லது விரிவு என்க. இனிப் பிரிந்து வணக்கஞ் செய்யாது, பிரியாது வணக்கஞ் செய்வேன் என்பார் 'ஏற்றாயடிக்கே இரவும் பகலும் எப்பொழுதும் பிரியாது வணங்குவன்' என்றார். பிரியாது வணங்குவதாவது பிறவுயிரையும் தன்னுயிரெனக் கருதும் சகோதர நேயமாகும். நீண்டகாலமாகச் சகோதரநேயம் பெறாதவாறு தடைசெய்துவரும் பிரிவை விலக்குமாறு, நம்பெருமான் 'கூறு ஆயினவாறு விலக்ககிலீர்' என்று ஆண்டவனையே வேண்டுதல் செய்தார். இதனால் பிரிவின் ஆற்றலை விளக்கியவாறும்.

187/03



'கூற்றாயினவாறு' என்னுந் திருப்பாட்டின் உள்ளுறை சகோதரநேயம். இவ்வாறு எனது சிற்றறிவுக்கு விளங்குகிறது. அப்பர் சகோதர நேயத்தைப் பெற்றார் என்பதற்குச் சான்றுகள் பல உள. எண்டைக்கு, 'அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ அன்புடைய மாமனும் மாமியும்நீ, ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ, துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ துணையாய்என் நெஞ்சந் துறப்பிப்பாய்நீ, இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே' என்னுந் திருத்தாண்டகத்தின் சான்று ஒன்று சாலும்.

அப்பர், தம்மிலும் பிறவுயிரிலும் உள்ளது சிவம்ஒன்றே என்ற உண்மை உணர்ந்து, சகோதரநேயத்தில் நின்றவராதலால், அவரை நஞ்சமுதம் கொல்லவில்லை; நீற்றறை எரிக்கவில்லை; யானை பணிந்து சென்றது; கடல்தாங்கிற்று. எங்கும் அன்பாகிய சிவத்தைக் கண்டோர்க்கு எங்கணும் அன்பாகிய சிவமே விளங்கும். இது சகோதரநேயம்.

சகோதரநேயம் சைவ உலகில் எந்நிலையி லிருக்கிறது? சாதி வேற்றுமைக்கு இரையாகுஞ் சைவ உலகில் சகோதர நேயம் எவ்வாறு நிலவும்? சைவத்தின் உயிராகிய சகோதர நேயம் சைவஉலகில் இல்லை எனில், சைவம் வளர்தற்கு இடம் ஏது? சகோதரநேயம் சைவத்தை வளர்க்கும் உயிர்ப்பு என்பதை உணர்ந்து, சைவ உலகம் இனியாதல் நடப்பதாக. நூலுரைகளைக் காட்டும் அளவில் சைவ உலகம் நிறைவு கொள்ளுதலாகாது.

புறங்கூறல், பொறாமை, இகல், தன்னலம் முதலியன சகோதரநேயத்தை அரிக்கும் விஷப் பூச்சிகள். இவைகளுக்கு இரையாகாதவாறு பொதுவாக எல்லாரும், சிறப்பாகச் சைவப் புலவர்களும் தங்களைக் காத்துக்கொள்வார்களாக.

சகோதரநேயம் இன்ப வாழ்வைக் கூட்டுதல் ஒருதலை. சகோதரநேயத்தில் உறைந்துநின்ற திருநாவுக்கரசர், 'என்நாளும் இன்பமே துன்பமில்லை' என்றார். அப்பர், அழியா இன்பத்தை இவ்வுலகிலேயே பெற்றமை கவனிக்கத்தக்கது. 'இறைகளோடிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு'

என்று வன்தொண்டரும் தமது வாழ்வின் அநுபவத்தை வெளியிட்டுள்ளார். இன்ப வாழ்வைச் சகோதரநேயத்தால் இவ்வுலகிலேயே பெறுதல்கூடும்.

இன்பம், 'இவ்வுலகிலில்லை அவ்வுலகி லுண்டு' என்று கருதுவது சித்த விகாரமாகும். இன்பம் எங்குமிருப்பது. சிவமே இன்பம். 'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே' என்றார் வாதவூரடிகள். சகோதரநேயம் பெருகப் பெருக, மாயை தானே மறைந்து மறைந்து மாயும். இன்பம் தோன்றும். இன்பவாழ்வுக்குச் சகோதரநேயம் வேண்டும்.

முறைகள்

நாம் பிறந்தோம் ; வளர்கிறோம் ; இறக்கப்போகிறோம். இறந்தபின் மீண்டும் பிறப்போம். இவ்வாறு பிறவிச் சகடம் சுழன்று சுழன்று வருகிறது. இச்சுழல் ஒழிதல் வேண்டும். இதுபற்றியே பெரியோர்கள் இறவாமையை வேட்டு நின்றார்கள்.

மனிதப் பிறவி விழுமியது. இப்பிறவி இறவாத இன்ப நிலை பெறுதற்குத் துணை செய்யும் வாய்ப்புகளை யுடையது. இப்பிறவியிலேயே இறவாமை பெற முயலுதல் வேண்டும். இறவாமை என்பதும் மீண்டும் பிறவாமை என்பதும் ஒன்றே. இறக்கும் ஒருவன் மீண்டும் பிறப்பன். இறவாத ஒருவன் மீண்டும் பிறவான். 'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்' என்பது திருவாசகம் ; 'இக் காயம் நீக்கி இனிஒரு காயத்தில் - புக்குப் பிறவாத போம் வழி தேடுமின்' என்பது திருமந்திரம். இத்திருமொழிகளை உற்று நோக்குக.

இறவாமைப் பேறு இருவிதம். ஒன்று பருவுடல் நிலையிலேயே அப்பேறு பெறுவது. இஃது அருமை. மற்றொன்று பருவுடல் நீத்த நுண்ணுடல் நிலையில் அப்பேறு பெறுவது. எந்நிலையிலாதல் இறவாமை பெறுவது ஈண்டுக் கருதற்பாலது. மனிதப் பிறவியின் நோக்கம் இறவாத இன்பத்தைப் பெறவேண்டு மென்பது. அந்நோக்கத்தை நிறைவேற்றுதற்



கென்றே பெறுதற்கரிய மனிதப் பிறவி நமக்கு ஆண்டவனால் அருளப்பட்டது. இப் பிறவியிலேயே இன்பப்பேற்றை அடைய முயலுதல் வேண்டும். இதற்குரிய முறைகள் ஆன்றோர்களால் கோலப்பட்டன. அவைகளை விரித்துக் கூறுதல் என்றால் இயலாது. மிகச்சிலவற்றை இங்கே குறிக்க விரும்புகிறேன்.

இளைஞர்கள் பெற்றோர் வழி நின்று கற்பன கற்கப் புகுவது ஒழுங்கு ; ஏதாவது ஒருவித நியமத்தில் குறிவைத்து, அதனை வழாது செய்ய இளமையிலேயே பயில்வது சிறப்பு ; உலகியல், உயிரியல், கடவுளியல் முதலியவற்றை ஆராய்வதில் தலைப்படுதல் விழுப்பம். இதற்குத் துணையாக மேல்நாட்டுக் கலைகளையும் நாடுவது நல்லது. தற்போது மேல்நாட்டுக் கலைகள் உரிமை உணர்வினின்றும் பிறத்தலால், அவையும் வாழ்வுக்கு வேண்டற்பாலன. நமது பண்டைக் கலைகளின் நுட்பங்கள் பல, தற்கால மேல்நாட்டுக் கலைகளால் விளக்கம் பெறும் என்பதில் ஐயமில்லை. பொருளுண்மை, சத்காரியம், மனோவசியம், யோகக் காட்சி, நுண்ணுடற் காட்சி, இளமை காத்தல் முதலியவற்றைத் தற்கால மேல்நாட்டுக் கலைகள் தெளிவாக விளக்கஞ் செய்து வருகின்றன. இவை, சித்தமார்க்க விளக்கத்துக்குத் துணை செய்வனவாம்.

மேல்நாட்டில் பொதுவாகத் தேகாத்ம உணர்வு பெருகி நின்றாலும், சிறப்பாகச் சில இடங்களில் ஆத்மசக்திக்குரிய (சித்தமார்க்கத்தின் அடிப்படையாகவுள்ள) சில துறைகள் காணப்பட்டு வருகின்றன. ஸர். ஆலிவர் லாட்ஜ் போன்றாரது ஆராய்ச்சி மேல்நாட்டில் என்றாதல் ஒருபெரும் மாறுதல் செய்யாமற் போகாது. ஆதலால், இளைஞர்கள் கலை ஆராய்ச்சியில் மேல்நாடு கீழ்நாடு என்னும் வேற்றுமை பாராட்ட வேண்டுவதில்லை.

இளமையில் கற்றனவற்றை வாழ்வில் பெறுதற்கு முயல்வது அறம். இதற்கு முதலாவது உடம்பை நன்முறையில் ஓம்புதல் வேண்டும் ; நேரிய முறையில் உலக இன்பத்தை நுகர உளங்கொளல் வேண்டும். இல்லையேல் பிறவி நோக்கம்

நிறைவேறுது. உயிர் விளக்கத்துக்கென உடம்பும் உலகும் ஆண்டவனால் கொடுக்கப்பட்டன. அவைகளைத் துறக்க வேண்டுமென்று சிலர் கூறுவர். இஃது இயற்கைக்கு மாறுபட்ட கொள்கை. இக்கொள்கையுடையார் சேர்க்கை இளைஞர் வாழ்வைப் பாழ்படுத்தும்.

உடலோம்புதற்கும், உலக இன்பத்தை நுகர்தற்கும் இல்வாழ்வில் நண்ணுதல் வேண்டும். இல்வாழ்வு அன்பைப் பெருக்குவது. தனித்த வாழ்வு அன்பைப் பெருக்கல் அரிது. பெண் ஆண் கூட்டுறவில் அன்பெனும் அமிழ்தம் பிறத்தல் இயல்பு.

இல்வாழ்விற் பிறக்கும் அன்பை இல்லத்தளவில் சிறைப்படுத்தலாகாது. அதை ஓடவிடுதல் வேண்டும். அன்பு வளர்ச்சிக்கு ஒப்புரவுக் கழகங்களில் சேர்ந்து ஒல்லும் வகை தொண்டு செய்வது நல்லது.

இல்வாழ்வாலும், தொண்டாலும் அன்பைப் பெருக்க முயல்வதுடன், சிவவழிபாட்டாலும் அன்பைப் பெருக்க முயலலாம். சிவமும் அன்பும் ஒன்றே. ‘அன்பே சிவம்’. சிவசிந்தை அன்பைப் பெருக்கும்.

சிவவழிபாட்டுக்கெனத் திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன. பண்டைக்காலத்தில் திருக்கோயில்கள் ஓவியக் கூடங்களாக விளங்கின. ஓவியங்கள் சிவத்தின் இயல்களை உணர்த்தும் அறிகுறிகள். ஓவியக் கூறுகளில் படிவது சிவத்தை வழிபடுவதாகும். ஓவிய நுட்பத்தை உணராது, கோயில் வழிபாடு செய்வது விக்கிரக ஆராதனையாக முடியும். காவியங்களும் சிவத்தின் இயல்களைத் தெரிப்பன. அவைகளுடன் உறவு கொள்வதும் சிவவழிபாடாகும்.

சிவ வழிபாட்டுக்குரிய பூக்கள் எட்டு என்று சிவாகமங்கள் சொல்கின்றன. அவை :—கொல்லாமை, புலனடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்பன. இவைகளைச் சீலங்களென்று பெரியோர் கூறுப. சீலம் வாழ்வுக்கு விழுப்பந் தருவது. சீலமில்லா வாழ்வில் சிவம் விளங்காது. ஆகவே, சீலத்தையும் ஓம்புதல் வேண்டும்.



நாம் தமிழர்கள். தமிழ்மொழியிலும் மறைகள் பிறந்துள்ளன. அவைகளிற் கலந்து, பொருளுணர்ந்து ஓதினால், கன்னெஞ்சுங் கரைந்துருகும். ‘உருகுஞ் செயல்’ முதிர முதிர உள்ளொளி பெருகும். உருகுஞ் செயலும் உள்ளொளி பெருக்கத்துக்குத் துணை செய்யும்.

சிவம், உயிரையும் இயற்கையையும் உடலாக்கொண்டது. உயிரையும் இயற்கையையும் வழிபடுவதும் சிவவழிபாடாகும். உயிர் வழிபாடாவது உயிர்க்குத் தொண்டு செய்வது. இது முன்னே சொல்லப்பட்டது.

இயற்கை வழிபாடு உள்ளொளியை எழுப்பும் ஆற்றல் வாய்ந்தது. இயற்கையோடியைந்து வாழ்வது இறையோடியைந்து வாழ்வதாகும். இயற்கை வாழ்வைப்பற்றியும் வழிபாட்டைப்பற்றியும் என் நூல்களிலெல்லாம் விரிவாக விளக்கியுள்ளேன். இங்கே இரண்டோர் உரை கூறும் அளவில் நின்று மேற்செல்வேன்.

காலையில் இளஞாயிறு எழுவதைக் காண்பதும், மாலையில் அதன் ஒளியில் மூழ்குவதும், இரவில் திங்கள் நிலவுபடர நீலவானில் படிவதும் வாழ்வுக்குரியன. ஓய்ந்த நேரத்தில் மலைக்குச் சென்று சோலைப்பசுமையையும், ஏரியின் நிறைவையும், ஆற்றோட்டத்தையும், கடல் நீலத்தையும் காண்டலும், வண்டின் பண்ணையும், பறவைப் பாட்டையும் அருவியின் முழக்கையும் கேட்டலும், ஒளியிலும் காற்றிலும் தோய்தலும் வாழ்வுக்கினியன. இவ்வியற்கை வழிபாடுமுதிர முதிர, இயற்கையின் நாநாபேதங்கள் படிப்படியாக மறையும். அவையாவும் ஒலியாகத் தோன்றும். அந்நிலையில் சிவம் ஒலியாகத் திகழும். பின்னே ஒலியும் மறைந்து ஒளி தோன்றும். இங்கே சிவம் ஒளியாக விளங்கும்.

ஒலிமறைந்து ஒளிதோன்றும்நிலையில், குருநாதன் காட்சி தந்து, நீறளித்து, உண்மைப் பொருளை அறிவுறுத்துவன். ஞானசம்பந்தர் அருளிய நீற்றுப் பதிகத்திலுள்ள நீறு இதுவே. இந்நீற்றைப் பிற்காலச் சித்தர் ‘முப்பு’ என்றனர். ‘முப்பு’ என்பது சிவநீறு. அது குருவருளால் கிடைப்பது. சிவநீற்றை உண்டு அணிபவர்க்கு மாற்றமனங்கடந்த மேல்

நிலை விளங்கும். அந்நிலை பெற்றோர்க்கு நரை எது? திரை எது? பிணி எது? மூப்பு எது? சாக்காடு எது? 'சித்தி தருவது நீறு', 'கவினைத் தருவது நீறு', 'துயிலைத் தடுப்பது நீறு', 'வெந்துயர் தீர்ப்பது நீறு', 'எல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு' எனவரூஉந் திருநீற்றுப்பதிக மொழிகளைப் பார்க்க.

ஒளிக்குமேலுள்ள நிலையைச் சொல்லால் சொல்லுதல் இயலாது. அது வாக்கு மனங் கடந்தது. அதைத் தெளிதற்குக் கல்லாலின் கீழமர்ந்த கருணை வடிவை-ஆனந்த அமுதை-சித்த குருவை - அடைவோம்; சிந்திப்போம்; தியானிப்போம்; அமைதி - அமைதி - அமைதியில் நிற்போம். அமைதி எங்கே? யான் எங்கே? அமைதியே! பேசா நிலை எதுவோ! சொல்லாமற் சொல்லும் பொருள் எதுவோ! நினையாமல் நினைக்கும்வகை எதுவோ! அறியேன்; அறியேன்; அறியேன். அகந்தையில் அழுந்திக் கிடக்கும் நாயேன் - பேயேன் - எதை அறிவேன்! எதை உணர்வேன்! சாந்தம் சாந்தம் சிவம்!

சாந்த உலகில் - சிவபுரியில் - சிங்கமும் புலியும் பசுவும் மயிலும் பாம்பும், சகோதரநேயத்தில் மூழ்கி, ஆனந்தத்தில் திளைத்து நிற்கின்றன. உலகம் அச்சிவபுரியாதல் வேண்டும்; அச்சிவபுரியில் யான் வாழ்தல்வேண்டும். அமைதியே! அடைக்கலம்; அடைக்கலம். சாந்தம் சாந்தம் சிவம்!

---

## III சமாஜம்

சிவபுரியிலிருந்து சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்கு வருகிறேன். சிவபுரிச் செல்வம் பெறுதற்குப் பழையகாலத்தில் பலதிறச் சாதனங்க ளிருந்தன. இப்பொழுது அவைகளிற்பல - ஏறக்குறைய எல்லாம், சிதறுண்டும் - பழுதுபட்டும் போயின. தற்காலத்துக்குச் சைவ சித்தாந்த மகா சமாஜம்போன்ற சாதனங்கள் தேவை.

ஒன்றுக்கு ஆக்கந்தேட ஒருவர் இருவர் சேர்ந்து உழைப்பதினும் பலர் சேர்ந்து உழைப்பது நலம். அப்பலரும்



ஒழுங்குபட்ட ஓர் அமைப்புள் நின்று தொண்டு செய்தால் பெருநலன் விளையும். அமைப்புக்களாகிய சபைகளின் இன்பத்தைத் தற்கால உலகம் நன்கு நுகர்ந்துவருகிறது. பெரும் பெரும் ஆட்சி முறைகளெல்லாம் சபைகளின் வாயிலாகவே நடந்து வருகின்றன. 'நான்குபேர் கூடுகிற இடத்தில் நான் இருப்பேன்' என்று கிறிஸ்து பெருமான் கூறியருளினர். 'வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்' என்று அப்பரும், 'இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து' என்று வாதவூரடிகளும், 'நல்லா ரிணக்கமும் நின் பூசை நேசமும்' என்று பட்டினத்தாரும், 'தொண்டரொடு கூட்டுகண்டாய்' என்று தாயுமானுரும் சங்கச் சிறப்பைச் சாற்றியருளினர். 'திருக்கூட்டச் சிறப்பு' பெரியபுராணத்தில் திகழ்கிறது. எதற்கும் ஒருவித அமைப்பிருத்தல் முறை என்பது பெரியோர் உட்கிடக்கை. ஆகவே, சிவநெறி வளர்ச்சிக்கெனத் தோன்றியுள்ள சபைகளுக்கெல்லாம் தாயகமாகச் 'சைவ சித்தாந்த மகா சமாஜம்' என்று ஒன்றிருத்தல் போற்றற்குரியதே.

சைவ சித்தாந்த மகாசமாஜம் தோன்றி இருபத்தொன்பது ஆண்டுகளாகின்றன. சமாஜம் அவ்வப்போது ஒவ்வொரு விதத்தொண்டை ஆற்றி யிருக்கிறது. இப்பொழுது—திருமிகு-மயிலை-பாலசுப்பிரமணிய முதலியார் அமைச்சராயமர்ந்த நாள்தொட்டு—சமாஜம், சில நற்காரியங்களை நிகழ்த்தி வருகிறது. அவைகளுள், பன்னிரு திருமுறையையும்-பதினான்கு சாத்திரத்தையும் - அடக்கவிலையில் சமாஜம் வெளியிட்டது சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இம்முறையில் சமாஜச் சார்பில் இன்னும் பல நூல்கள் வெளிவருமென்று உலகம் எதிர்பார்க்கிறது.

சமாஜம் ஆற்றத்தக்க தொண்டுகள் இன்ன இன்ன என்று பலபடக் கூறலாம். அவைகள் பெரிதும் ஒவ்வோராண்டும் மேடையில் பேசப்பட்டன. அவைகள் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளை மீண்டும் இங்கே விரித்துக் கூறுதற்கு மனம் எழவில்லை. பொது

னேன். இனிச் சமயப்பற்றும் சமுதாயப் பெருமையும் நிலைத்திருப்பதற்கு அவசியமாக வேண்டப்படும் கல்வியைக் குறித்துச் சில கூற விரும்புகின்றேன்.

**கல்வி : பொது**

சாஸ்திர விஷயமான கல்வியைப்பற்றி, சமயத்திற்கு நேர்ந்திருக்குங் குறைபாடுகளை விவரிக்கு மிடத்து ஒருசிறிது கூறினேன். நமக்குமட்டுமன்று : ஆண் பெண் இருபாலார்க்கும் இப்போதுள்ள கல்விமுறை மிகவும் பொருந்த மற்றதாகவேயுள்ளது. பிற நாட்டினர் அவ்வவர் தாய் மொழியில் கல்வி பயிலுகிறார்கள். நமது துரதிர்ஷ்டவசத்தால் பிற பாஷைகளுக்குங்கூட நாம் அடிமையா யிருக்கிறோம். நமது தாய்மொழியில் நாம் கல்வி பயிலுவதில்லை. நமது குழந்தைகள் 5 வயதளவில் ஆங்கிலம் படிக்கத்தொடங்கி 21-வது வயது முடியக்கற்றுப், பின் பீ. ஏ. பட்டம் பெறுகிறார்கள். இந்நீண்டகாலக் கல்வி அவர்களது வாழ்க்கைக்குச் சிறிதும் பயன்படுவதில்லை. இது ஒருபுறமாக, அவர்களுடைய அறிவேனும் விசாலித்து வளம் பெற்றிருக்கிறதா? என்று பார்த்தால், அதுவும் இல்லை. எப்பொழுதும் பரீட்சைதான்! வாரப் பரீக்ஷை, மாதப் பரீக்ஷை, ஆண்டுப் பரீக்ஷை, திடீரென்று பரீக்ஷை (Surprise examinations): இப்பரீக்ஷைகளாலும் அதற்கு வேண்டும் புத்தகப் படிப்பாலும் சரீரம் மெலிந்து எலும்பாகிப் பின்னுள்ள வாழ்க்கைக்குச் சிறிதும் உதவாது போய்விடுகிறது. இவ்வாறு இரவும் பகலும் படித்த படிப்பும் ஞாபகத்தின் அளவில் நின்று விடுவதேயன்றி அறிவினுட்சென்று கலந்து விடுவதில்லை. ஏகதேசமாக, அறிவினுட்சென்று கலந்தபோதினும், அது அவர்களுடைய பிற்கால வாழ்க்கைக்குச்சாதகமாவதேயில்லை. விடியவிடிய வாசித்துப் பிரகிருதிசாஸ்திரத்தில் ஒருவன் தேர்வு பெறுகிறானென்று வைத்துக்கொள்வோம். தேர்வு முடிந்ததும், தொழிலுக்காகச் சிலகாலந் திண்டாடிக் கடைசியாக நல்லதிர்ஷ்டத்தால் ஏதேனும் சிபார்சுபெற்று ரூ. 35 நிவேதனத்தில் ஒரு குமாஸ்தா உத்தியோகம் அடைகிறான். இந்தக் குமாஸ்தாவேலையோ கணப்பொழுதுகூட இவனுக்கு ஓய்வு கொடுப்பதில்லை. இவன் கற்ற கல்வி எவ்வாறு இவ



னுக்குப் பயன்படும்? நம்மக்களுட் பெரும்பாலாரது கதி இதுவே. ஒரு நாட்டினரைத் தோலும் துரும்புமாக்கி, அவர்களது மக்கள்-தத்துவத்தையே அழித்துத் தலைமுறை தலைமுறையாக அவர்களை அதோகதியில் ஆழ்த்திவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதோ இக்கல்விமுறை யென்ற எண்ணம் நமக்கு உண்டாவது இயற்கையேயல்லவோ? இக்கல்வியால் ஏற்படும் பொருள் நஷ்டத்தை நோக்கினாலும் அதிபயங்கரமா யிருக்கிறது. போலிக்கல்விக்காக எத்தனையோ குடும்பங்கள் நாசமாய் விடுவதை நாம் தினந்தோறும் காண்கிறோம்.

இவ்வாறு கற்பிக்கப்படுங் கல்வியை நமது தாய்மொழி மூலமாகக் கற்பிப்பதாயின் இத்தனை கஷ்டப்பாடின்றி, இத்துணைக் காலச்செலவும் பொருட்செலவுமின்றி எளிதிற் கற்பிக்கலாம். 5 வயது முதல் 21 வயது முடிய 17 வருஷங்கள் கற்குங் கல்வியை 16-வது வயதிற்குள் சுமார் 10 வருஷங்களில் நன்றாகவும், திடமாகவும், மனத்திலே தங்கி ஊறும்படியாகவும், அறிவு விசாலிக்கும்படியாகவும் கற்று முடித்தல் கூடும். தக்க பருவத்திலே 7 வருஷ காலம் மிச்சம் பிடிப்பதென்றால், அதனால் எத்தனை நன்மை பாருங்கள்? கல்வியும் எத்துணை பயனுடையதாகவும் இன்பகரமாகவும் இருக்கும்?

தாய்மொழி மூலமாகக் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்ற உணர்ச்சியானது இப்பொழுதுதான் நம்மிடையே பரவி வருகிறது. இப்பொழுதுள்ள தேசீயக் கிளர்ச்சியும் இவ்வுணர்ச்சியை வலியுறுத்தி வருகின்றது. ஆனால் இதை அனுஷ்டானத்திற்குக்கொண்டு வருதலில் பலப்பல இடையூறுகள் உள்ளன. தங்கள் தாய்மொழியாகிய தமிழிற் பெயர்கூட எழுத அறியாது, ஆங்கிலம் ஒருவாறு கற்று, அம்மொழியிலே தம்மைப் பெரும் புலவராகக் கருதி, தம்மைத் தமிழ் மகனென்று கூறுவதுதானும் வெட்கக்கேடென்று நினைத்து ஆங்கில நடையுடை பாவனைகளைக் கைக்கொண்டு இறுமாந்து மதிமயங்கித் திரியும் கலாசாலையாசிரியர்களும் அவர்களையொத்த பிறருமே பேரிடையூறுசெய்து நிற்பவர்கள். இடையூறு எவ்வகையினவாயிருப்பினும், அவைகளை யெல்லாம் நமது விடா

முயற்சியாலும் பிரசார வன்மையாலும் அழித்தொழிக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் நமக்கு ஆற்றலை அருளுமாறு பிரார்த்திப்போமாக.

முற்கூறிய கலாசாலை ஆசிரியர்களுக்குத் தாய்மொழி என்றால் அருவருப்பு. இவர்களாலேயே தாய்மொழி ஆதரவற்றுத் தவிக்கிறது. தமிழ் என்றால் பெரும்பாலார் கேவலமாகக் கருதுகிறார்கள். தமிழ்த்தாய்க்கு அளிக்கவேண்டும் மதிப்பு நம்மவரால் அளிக்கப்படவில்லை. தமிழ் அன்னையின் அழுகுரல் கேட்கின்றது. நம்மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வைப் பொறுத்துள்ளது. அவ்வாழ்வைப் புறக்கணிக்கிறோம். "இன்பத் தேன் வந்து பாயும்" தமிழின் நறுஞ்சுவையை இப்போது அனுபவிக்கிறோமா? வெட்கத்தோடு, 'இல்லை' யென்றே கூற வேண்டி யிருக்கிறது. மக்களே தாயை ஆதரியாதிருந்தால் அவள் கதி எவ்வாறாகும்? நமது தகுதிதான் என்னாகும்? சகோதரிகளே! தமிழுக்காகத் தொண்டுபுரிய முன்வருவோம். தமிழ் நலத்திற்காக உழைப்பதன் பொருட்டு இறைவன் நமக்கு அறிவாற்றல்களைத் தந்தருளுமாறு பிரார்த்திப்போமாக.

நம்மினத்தவர்களும் ஆண்மக்களைப் போலவே கலாசாலைகளிற் கற்றுவருதல்பற்றிப் பொதுவாகவுள்ள கல்வியைக் குறித்து இத்துணை பேசினேன். இனி நம்மினத்தவர்க்கே உரிய கல்வி விஷயத்தைக் குறித்துச் சில கூறுதல் அவசியமென்று நினைக்கிறேன்.

**பெண்களுக் குரிய கல்வி**

பெண்களுக்கு உயர்தரக் கல்வி வேண்டுவதுதானா என்ற ஒரு கேள்வியை நாம் எடுத்துக் கொள்வோம். இதற்குரிய நியாயங்களைப் பலபட ஆராய வேண்டுவதில்லை. ஒருசிலரே உயர்தரக் கல்வியை (Collegiate Education) மேற்கொள்ளுவதற்குத் தகுதி வாய்ந்தவராவர். அவர்கள் தங்கள் தகுதிக்கேற்ப உயர்தரக் கல்வியை நாடி உயர்தரக் கலாசாலைகளுக்குச் செல்லட்டும். நம்மிற் பெரும்பாலார்க்கு உயர்தரக் கல்வி இன்றியமையாத தன்றெனத்தான் கூற வேண்டும். இப்போது ஆண்மக்களும் பெண்மக்களும் கல்வி முறையில் ஒரு வேறுபாடுமின்றி ஒரே முறையிற் போதிக்கப்பட்டு வருகிறார்கள். பெண்களாகிய நமது வாழ்க்கைக்குத்



தக்கபடி, கல்வி முறையின் அமைப்பு மாறுபடுதல் வேண்டும். தாய்ப்பாஷையை நன்றாய்க் கற்று அதற்கு மேல்தான் மற்றப் பாஷைகளைப் படிக்கவேண்டும். அப்பொழுதுதான் அப்பாஷைகளிலுள்ள பெரியார் கருத்துக்களாலும் மற்றைய விசேடங்களாலும் நாம் பயனடையக் கூடியவர்களாவோம். நமக்குத் தாய்மொழியில் நல்ல பயிற்சி யுண்டாகும்படி கல்வி முறை அமையவேண்டும். ஆங்கிலக் கல்வியும் ஓரளவு வேண்டற்பாலதே. பல துறைகளிலும் ஆங்கிலம் பயன்படுவதா யிருக்கும். சங்கீதம் முதலிய நற்கலைகளில் (Fine Arts) நமக்கு நல்ல பயிற்சி யுண்டாகும்படி கல்விமுறை அமைய வேண்டும். அன்றியும், இல்லற நிர்வாகத்திற்குரிய விஷயங்களனைத்தும் (Domestic Science, Domestic Economy etc.) நமக்குச் செவ்வனே கற்பிக்கப்படுதல் வேண்டும். இம்முறையிலே நமது கல்வி அமையுமாயின், நம்மிற் பெரும்பாலார்க்குத் திருப்திகரமா யிருக்குமென்றெண்ணுகிறேன். இதற்கு வேண்டும் முயற்சிகளை நாமும் நமது சகோதரர்களும் செய்ய முற்படுதல் வேண்டும். இறைவன் திருவருள் இதனைக் கூட்டுவிப்பதாக.

சகோதரிகளே! சமயம் பற்றியும் கல்வி பற்றியும் எனக்குத் தோற்றிய சில கருத்துக்களை உங்கள் முன்னிலையில் கூறினேன். இம்மூன்றில் ஒவ்வொன்றும் எத்தனையோ விரிவாக ஆராயப்பட வேண்டுவதா யுள்ளது. ஒவ்வொன்றிலும் எத்தனையோ கேள்விகள் இயல்பாக எழக்கூடியன. அவற்றையெல்லாம் இங்கெடுத்து வியவகரிப்பதாயின் உங்கள் பொறுமையையும் அதிக்கிரமித்து நான் பேசிக்கொண்டிருக்க நேரிடும். ஆதலால், இதுகாறும் மிக்க அன்போடும் பொறுமையோடும் கேட்டுக்கொண்டிருந்த உங்களனைவர்க்கும் என் நன்றியைச் செலுத்தி இத் தலைமையுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

ஆனால், ஒன்று மாத்திரம் கூற விரும்புகிறேன். இது வரை எடுத்து மொழிந்த பிரார்த்தனையோடு அமையாது

**முடிவுரை**

அவை நிறைவேறுவதற்கு நாம் இடைவிடாது முயற்சி செய்யவேண்டுமென்பதை மாத்திரம் உங்களுக்கு ஞாபகப் படுத்தி உங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

> ‘ குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான் முந்துறும்.’

என்பது பொய்யா வேதம். நமது முயற்சியிருந்தாலன்றித் திருவருளின் துணையை நாம் எதிர்பார்த்தல் கூடாது. ஆதலின் சகோதரிகளே! சைவம் தழைத்தோங்கவும், நமது பெண்ணினத்தார்கள் கௌரவ வாழ்க்கை வாழ்ந்து ஆண்பாலார்க்கு உண்மையான துணையாய் நிற்கவும், நமது தமிழ்த் தாய் செழித்து வளரவும், நமது தேசம் முன்னேற்றமடையவும் உழைப்பதற்கு நாட்டங் கொள்ளுவோம். நம் உழைப்பைப் பாரதமாதா எதிர்நோக்கி நிற்கின்றாள். இவ்வாறு முயலுவதற்கு அருட்பெருஞ் ஜோதியாகிய நம் ஆண்டவன் நமக்குப் போதிய அறிவும் ஆற்றலும் ஊக்கமும் அளிப்பானாக. சுபம்!

## சைவ இளைஞர் மகாநாட்டுத்

# த லை மை உ ரை

[திரு. கீ. இராமலிங்கம்]

(தொடர்ச்சி)

### (v) நம் சமயத்தில் இளமைப் பெரியார்

நமது சமயத்திலே தோன்றி, நம்மதத்தை வளர்த்தவர்களில் தலை சிறந்தவர்களெல்லாம் இளைஞர்களே யன்றோ? சைவ சமய குரவர்கள் நால்வரும் இளமைப் பருவத்திலே தானே சமய குரவர்களாகும் பெற்றிபெற்றனர். சந்தான குரவரில் முதன்மையான மெய்கண்ட சிவனார் உலகினுக்கு சித்தாந்த சுத்த அத்துவித தத்துவத்தினை விளக்கும்போது என்ன வயதுடையவராயிருந்தார் என்பதனை நான் எடுத்துக் கூறவேண்டுவதில்லை. இளைஞர் மார்க்கண்டேயர், இறைவன் திருவடித் தஞ்சம்பற்றிக் காலனையும் வென்று ‘என்றும் பதினாறு வயது’ பெற்றது எந்தச் சைவருக்குத் தெரியாது. சென்ற நூற்றாண்டுகளுக்குள் மிளிர்ந்த இராமலிங்கசுவாமிகள் இளமையிலே இறைவனைப்பற்றிக் கொண்டதையும், கடவுள் அவருக்கு அருள்செய்ததையும் எல்லோரும் அறிவரன்றோ?

## III நமது குறைபாடுகள்

சைவ இளைஞர்களது குறைகள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளில் முக்கியமான சிலவற்றையே இங்குக் குறிக்கமுடியும். ஒருவரது குறைகளை ஒருவர் நன்றாகப் பன்னிப்பன்னி சிந்திக்கவேண்டும். அப்போது தான் அக் குறைகளின் கொடுமை புலனாக அவற்றை யொழிக்க முயற்சி யுண்டாகும்.

### (i) சமய அறிவு சமயப்பற்று குறைவு

இக்காலத்திய சைவ இளைஞர் பெரும்பாலார்க்குச் சமய அறிவு மிகக் குறைவாக இருக்கின்றது. சமய சம்பந்த

மான ஞானமே யில்லையென்றும் சொல்லலாம். இதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானது சமயத்திலே பற்று இன்மையேயாகும். மதத்தில் ஆழ்ந்த அபிமானம் ஏற்பட்டுவிட்டால், மதத்தைப்பற்றிய யாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் வேட்கையும், வேட்கையின் பயனாய்த் தக்க முயற்சியும், முயற்சியின் வாயிலாய்ச் சமய நல்லறிவும் வாய்த்துவிடும். சமயப் பற்று முளைத்தெழாது கிடப்பதற்குக் காரணங்களும் பல. அவைகளைக் களைந்து எறிந்து, சமய வேட்கை என்னும் வித்து நலமுற வெளிக் கிளம்பவும், சமயப் பயிர் தழைத்து ஓங்கவும் செய்வதே இம்மகாநாடு போன்ற கூட்டங்களால் போதரவல்ல பயனாகும்.

## (ii) நம்மொழியில் ஆர்வமும் ஆற்றலும் குறைவு

வயிற்றுப் பிழைப்புக்குரிய ஆங்கில மொழியைப்படித்த தமிழ் இளைஞர் இருவர் கலக்குங் காலத்து, அவர்கள், தங்கள் தாய்மொழியை மறந்து, ஆங்கிலத்தில் உரையாடுவது விந்தைதரும் செயலாகும். அண்ணன் தம்பியரும், உற்றார் உறவினரும், ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதும் போதும், பேசும்போதுங்கூட, அன்னிய மொழியைப் பயன்படுத்துகிறார்களே! மலையாளிகள் இருவர், ஆங்கிலக் கல்வியில் உச்சநிலை பெற்ற மலையாளிகள் இருவர், உயர்ந்த உத்தியோகங்கள் செய்யும் மலையாளிகள் இருவர் கூடுங் காலத்து என்ன மொழியில் பேசுகிறார்கள் என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். மலையாளத்தை மறப்பார்களா? மற்ற மொழியை நினைப்பார்களா? ஆங்கிலேயர்கள், உத்தியோக முறைக்காகத் தமிழும் பிற உள்நாட்டு மொழிகளும் பயில்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அம்மொழிகளிலே ஆற்றல் வாய்ந்த ஐரோப்பியர்கள் பலரும் இருக்கின்றனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவர்கள், தங்கள் இனத்தாரோடு அளவளாவும் போது அன்னிய மொழியைத் துளியும் துணை கொள்வார்களென்று கனவிலும் நீங்கள் நினைக்கின்றீர்களா? தங்கள் மொழி ஒன்றிருக்க, நம் தமிழ்ப் பாஷையிலே தங்கள் இரகசியங்களைக்கூட எழுதவும் பேசவும் செய்யும் ஆங்கிலேயர் இருவரைக் காண நேர்ந்துவிட்டால் நாம் எவ்வளவு சிரித்து, எத்தனை ஏளனம் செய்வோம்? நம் மொழி அவர்கள் மொழியைவென்று, அவர்கள் உள்ளத்தை வென்று, அவர்கள் எழுத்தையும் பேச்சையும் ஆள்வதைக் கண்டு எம்மட்டு இறுமாப்பு எய்துவோம்! நம்மைக் கண்டல்லவா அவர்கள் எல்லோரும் சிரிக்கவும் எள்ளவும் இறுமாக்கவும் வைத்துக்கொண்டிருக்கிறோம்! அந்தோ! என்னே! நம் மன்னை மொழியை நாம் போற்றுமாறு! படித்த தமிழர்களது நிலையே இப்படியாகப், படியாது, பயிர்த்தொழிலிலும் பல வகைத் தொழிலிலும் ஈடுபட்டுக் கிடக்கும் நம் உடன்பிறப்பினரைப்பற்றிப் பேசுவது ஏன்? படித்தவர்களே ஊட்டாது போனால், படிப்பில்லாதார்களுக்குத் தமிழ் மொழியிலே ஆர்வம் எங்கிருந்து வரப்போகின்றது? கற்றவர்களே நம் தாய் மொழியில் தங்கள் கருத்துக்களைச் செம்மையாகத் தெரிவித்துக் கொள்ள இயலாதவர்களாயிருக்கும்போது, கல்லாதவர்கள், திருத்தமாகவும் அழகாகவும், பேசவும் எழுதவும், ஆற்றல் உற்றவர்களாய் எப்படியாய் விடமுடியும்?

## (iii) முன்னுக்குவா முயற்சியின்மை

தள்ளிக்கொண்டு முன்னுக்கு வருகின்ற தன்மை நம் தமிழ்ச் சைவ இளைஞர்களிடத்து மிகக் குறைந்திருக்கின்றதென்பது அடியேனது அநுபவம். நம் நாட்டின் பிறமக்கள் தொகுதிகளிலுள்ள இளைஞர்களிடத்துக் காணப் பெறும் முன்னூக்கு நம் சைவ இளைஞர்களிடத்துக் கிடையாதென்பதை நாம் உணரவேண்டும். இலையைப்பற்றினால் போதும் என்று குட்டிக்கரணம் போட்டு, இலைக்கு எட்டியதும், மெல்ல மிலாறைப் பிடித்துப், பின் சிறு கிளையைப்பற்றி, அப்பால் பெருங் கிளைக்குத் தாவிக் கதுமென நடுமரத்தில் ஏறி அமர்ந்து கொண்டு, மரமுழுவதையுமே வேர்களும் நடுங்கும்படி குலுக்கி, ஆட்டிப் படைக்கும் சிறப்பு சில இளைஞர்களுக்கு இருப்பதை நாம் பார்க்கிறோமல்லவா? செங்குத்தாய்த் தூக்கி நடுமரத்தில் உட்காரவைத்தாலும், மரக்கிளை

களைப்பற்றி, அமைதியுடன் அமர்ந்திருக்கவும் கில்லாது கைகால் நடுக்கங் கொண்டு கீழே விழுந்துவிடுவோமோ என அஞ்சும் நம் இளைஞர்களை என்னென்று சொல்வது?

### (iv) ஒழுங்கற்ற சில பழக்க வழக்கங்கள் :

#### (அ) வைகறைத்துயில் :

விடியற்காலத்திலே எழுந்திருப்பதால் உடலுக்கும் உள்ளத்திற்கும் எவ்வளவோ நன்மை உண்டு என்று கீழ்நாட்டவரேயன்றி மேல் நாட்டவரும், இன்று மாத்திரமல்லாமல், பண்டை நாள் தொட்டு முறையிட்டு வருகின்றனர். ஆனால் இக்காலத்திலோ, ஞாயிறு எழுமுன் எழுந்து வருவது நாகரிகக் குறைவான செயலாக எண்ணப்படுகின்றது. 'ஏழடிக்காமல் என்னால் எழுந்திருக்க முடியவில்லை' என்று சொல்லிக் கொள்வது இன்றைய இளைஞர்களுக்கு இயல்பாகவும் கௌரவமாகவுமிருக்கின்றது. காலை நெடுநேரம் தூங்கி விடுவதனால், பாராயணம் முதலிய சமயக் கடமைகட்குத் தக்க காலம் நேராது போய்விடுகின்றது. ஒரு நாளின் இளமைப் பருவமாகிய அதிகாலை வேளையிலே படிக்கும் படிப்பே உள்ளத்தில் ஊன்றிப் பதியவல்லது என்பது அநுபவ உண்மையாகும். அந்தகைய அருமைக்காலத்தை உறக்கத்தால் சிறிதும் சிதறவிடாமல் கல்விக்குப் பயன்பெறுத்திக் கொள்ளுதல் வேண்டாமா? இரவில் நெடுந்தூரம் தூக்கம் விழித்திருப்பதும் ஒரு கெட்ட பழக்கம். இந்தத் தகாத பழக்கத்தைக் கையாண்டால், இன்றியமையாது, காலைத் தூக்கத்தையும் கைக்கொள்ள வேண்டியதாகத்தான் வந்து சேரும். இரண்டையும் ஒழிக்க முயலவேண்டும்.

#### (ஆ) உடற்பயிற்சியில் ஊக்கமின்மை

வைகறையில் துயில் நீத்ததும், கால்மணி நேரமாவது ஒவ்வொரு இளைஞரும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். தேக அப்பியாசத்தின் இன்றியமையாமையைப்பற்றி மேல் நாட்டவரும் பலபடப்பேசும் இக்காலத்திலும் இளைஞர்களில் நூற்றுக்கு ஒருவராவது, ஏன் ஆயிரத்திற்கு ஒருவராவது,



உடற்பயிற்சியை விடாது செய்து வருகின்றனரென்று சொல்ல முடியுமா?

வீரஞ் செறிந்த இத்தமிழ்நாட்டில், சமய வீரர்கள் நிறைந்த இச்சைவ பூமியில் பிறந்த நாம், இப்போது புள்களாகவும் பூச்சிக்களாகவும் பிறர் கண்ணுக்குத் தோன்றும்படி ஆய்விட்டதற்குக் காரணம், போதியதும், தகுதியானதும், முறையுற்றதுமான உடற்பயிற்சி இல்லாமையேயல்லவா? திடமான தேகமுள்ளவர்களாக, நாளொன்றுக்குப் பல மணி நேரம் படிக்கவும் எழுதவும் பிற தொழில் புரியவும் சளைக்காத வலுவுள்ளவர்களாக இருந்தால் அன்றி, நாம் எப்படி நம் சமயத்திற்கும் மொழிக்கும் நாட்டுக்கும் உழைத்து நல்ல பயன் அடைய முடியும்? சில மணி நேரம் சிறுசிறு வேலைகளினாலேயே ஓய்வு அடைந்துபோகும் கருவி கரணங்களையுடையவர்கள் எப்படிப் பெரிய காரியங்களைச் செய்து பெரும் பலனை எய்தவும் எய்துவிக்கவும் இயலும்?

#### (இ) புகைப் பைத்தியம்

"பிள்ளைகட் கழகு பீடி பிடித்தல்"

"சிறுவர்க் கழகு சிகரேட்டு பிடித்தல்"

என்பன இக்காலத்திய நீதிவாக்கியங்களாக இருக்கின்றன. எங்கே போனாலும் புகை! எங்கே போனாலும் புகை! இருப்புவழி வண்டியில் ஏறினால் புகை! மின்னாற்றல் வண்டியில் சென்றால் புகை! தானியங்கியில் தலைகாட்டினால் புகை! தெருவில் நடந்தால் புகை, கடைகளில் நின்றால் புகை! எங்கும் புகை. புகைமயம் ஜகத்! இக்குறைக்கு யாரண்டைபோய் அழலாம். 'பீடிகளையும் சிகரேட்டுகளையும் வாங்கிப் பிடித்து ஆனந்தியுங்கள்' என்று பறையறையும் விளம்பரங்களண்டைச் செல்லலாமா? அவற்றை விற்றுப் பணங்குவிக்க எண்ணும் வியாபாரிகளை அணுகலாமா? இவைகளைச் செய்ய முதல் துணையான பத்திரத்தை உற்பத்தி செய்யும் பிரமனை நோவலாமா? பிரம்மபத்திரம் என்று பேர்போனதல்லவா புகையிலை? அது விளையவில்லையென்றால் பின்பு பீடிகளும் சிகரேட்டுகளும் வயிற்றுப் பிழைப்புக்கு எங்கே போகும்?

இப்புகையிலை, புகைக்கும் இலையாக மாத்திரம் நின்றுவிடாமல், மூக்குவழி உரியும் பொடியாகவும், நாக்கிலிட்டுச் சுவைக்கும் சுருளாகவுமன்றோ தொழிற்பட வந்துவிட்டிருக்கிறது. நுரைஈரலிலும், மூளையிலும், வயிற்றிலும் சென்று இப்பாழ்ம் பொருள் என்ன அல்லலை விளைவிக்கின்றதென்பதை உடற்கூற்றின் உண்மையுணர்ந்த மருந்தறிஞரெல்லாம் அறைந்து கூவுகின்றனரே. நலஞ் சிறிதும் தாராததொரு பொருளை ஏனோ பயன்பெறுத்தப் பழகிக்கொள்ளல் வேண்டும்?

சைவ இளைஞர்களெல்லாம் இவ்விலைக்கு அடிமைகளாயிருக்கின்றனர் என்று கூற வரவில்லை. சைவ சமயிகள்வயிற்றில் பிறந்து, நெற்றி நிறைய விபூதியணிந்து, நடுவண் இடுவதாகிய சந்தனமும் இட்டு, குங்குமங்கூட கலந்தணிந்த சைவ இளைஞர்களும், இவ்விலையை ஒருவகையிலாவது பயன்படுத்துவதை நாம் பார்க்க முடியாதிருக்கவில்லை. இளமைப் பழக்கம் சுடுகாடுமட்டு மாயிற்றே. இளமையிலேயே இவ்விலைப் பழக்கம் அணுகாது இருக்கப் பாராவிட்டால், பின்னர்ப் பைத்தியம் பிடித்ததுபோலாய், இடர்ப்பட வேண்டியதாய்விடுமே என்றுதான் இவ்வளவு வற்புறுத்தி இந்தப் பத்திரத்தைப் பற்றிக் கத்தவேண்டியிருக்கிறது.

(ஈ) தலைமயிர் அமைப்பு

இதைப்பற்றி நான் பேசுவதென்றால் நீங்கள் எல்லோரும் சந்தேகங் கொள்வீர்கள். சமயத்திற்கும் தலை மயிரின் அமைப்புக்கும் பெரியதொரு சம்பந்தமிருக்கின்றது என்று எண்ணுபவர்களோடு ஒத்து எண்ண எனக்குத் தோன்றவில்லை.

சமயப் பற்றுடைய ஒவ்வொருவரும் அவசியம் அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லும் குடுமி என்பது சைவத்திற்கும் தமிழுக்கும் எக்காலத்திலும் உரியதாகும் என்று சொல்ல முடியாது. நம் நாட்டில் எத்தனையோ அயலார் குடியேறி யிருக்கின்றனர். அப்படிக் குடியேறிய அயல் மக்களது பழக்க வழக்கங்களில் விரும்பின சில, பலவற்றை



நம் தமிழ் மக்கள் தங்களுக்கும் உரியவாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதே குடுமி என்னும் தலைமயிர் அமைப்பாகும் என்பது அடியேன் கருத்து.

பலவகையான தலைமயிர் அமைப்புகள் வந்த வரலாறு ஆராயற்பாலது. முதன் முதலில் மனிதன் தலை நிறைய மயிரை நீள வளர்த்து வந்திருக்கவேண்டும். அப்படி வளர்த்துக்கொள்வது சங்கடமாயிருக்கின்றதென்பதை அநுபவவாயிலாக அறிந்து மயிரைக் குறைத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கவேண்டும். அத்தீர்மானத்தின் பயனாக, முழுதும் நீக்கி மொட்டைகளாயினர் ஒருசாரார்; முன்னே குறைத்தார் மற்றொருசாரார்: பின்னே சரைத்தார் பிறிதொரு சாரார்; சுற்றிக் கழித்தார் வேறொரு சாரார்; முழுதும் வைத்துக் கத்தரித்துவிட்டார் இன்னொரு சாரார். இவ்வாறு நேர்ந்த பல அமைப்புக்களிலே குடுமி சில நூற்றாண்டுகளாக நம்மை ஆண்டு வருகிறது. ஆகவே, அது பழையது என்னும் சிறப்புப் பெற்றிருக்கிறது; சமயவாழ்க்கையோடு சம்பந்தமடைந்து விட்டிருக்கிறது. தலை மயிர் கத்தரித்துக்கொள்ளுதலோ (கிராப்போ) நேற்றைய பொருளாக இருக்கின்றது; சமயப் பற்றுடையவர்கள் வெறுக்கும் பண்டமாயிருக்கிறது.

குறைத்துச் சுகமடைய வேண்டும் என்னும் வேட்கையோடு செய்யப்பெற்ற பிற்காலத்திய தலைமயிர் அமைப்புகளில், எது உண்மையில் சுகமானது, எது அறிவுக்குப் பொருத்தமானது, எது தலைநிரம்ப சிறுசிறு அளவான மயிரையும் கருவிலிருக்கும்போதே படைத்த இறைவனது திருக்குறிப்புக்கு இணக்கமானது என்று ஆராய்தல் வேண்டும். அப்படி ஆராயின், மயிரைத் தலை நிறைய வைத்துக் கத்தரித்துக்கொள்ளும் பழக்கமே சாலச் சிறந்தது; அறிஞர்களால் கையாளப் பெறவேண்டுவது; சமயத்தின் சாரமாகிய கடவுளது கருத்துக்கு இசைந்தது என்ற முடிவுக்கு எம்மனிதனும் வரக்கூடும்.

மயிர் கத்தரித்துக்கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்தவுடனே, குடுமி வைத்துக்கொண்டிருப்பதனாலேயே மிகச்

சமயப் பற்றுடையவராகத் தம்மை எண்ணிக்கொண்டிருக்கும் மற்றொருவர், அருவருப்புக் கொள்வதும், சமய விரோதி யென்று அவரைத் தாழ்வாக நினைப்பதும் வழக்கமாக இருப்பதனாலே, நமது குறைபாடுகள் என்னும் தலைப்பின் கீழ் இம்மயிர் அமைப்பைப்பற்றி இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியதாயிற்று.

**உணவில் நாக்கின் போக்கு**

உயிர் வாழ்ந்திருப்பதற்காக உண்பது கடமை என்பது போய், உண்பதற்காக உயிர் வாழவேண்டும் என்று எண்ணுங்காலம் இதுவாயிருக்கிறது. பசி கோரியபடி உணவுகொள்வதுபோய், நாக்குச் சொல்வதுபோல நயந்து உண்பது வழக்கமாய்விட்டது. நமது பசியைச் சிமைக் கடிகாரம் அறிந்து சொல்கிறதே யன்றி, நமது வயிறு அறிந்து கூறுவதாகக் காணோம். வயிறு நிரம்பாமலேயே சாப்பிட்டு எழுந்துவிடும் பழக்கம் மேலிட்டுவிட்டது. இருமுறைக்குப் பல முறையாகச் சிறுகச் சிறுகச் சிற்றுணா பேருணா என்று, ஈரத்தின்மேல் ஈரம் போடுவதென்றால் நிரம்ப எப்படிச் சாப்பிடமுடியும்?

உணவிலே, எது சத்தானது, எது பசிப் பிணியைப் போக்குவதோடு, உடலுக்கு உரந் தந்து நல்லறிவையும் வளர்க்கக்கூடியது, எது அருள்மயமான இறைவனின் திருக்குறிப்புக்கு இசைந்தது என்று ஆராய்ந்து உண்ணும் வழக்கம் மிகப் பெரிதும் குன்றிவிட்டது. 'சைவ சமயத்திற்கு அடிப்படை உயிர்களைக் கொன்று தின்னாமையேயாகும்' என்னும் எண்ணம், சைவ சமயத்தவர் எல்லோராலும் ஒருமிக்க எண்ணப்படுவது இல்லையாயிற்று. 'ஒருவர் சைவமாயிருக்கிறார்' என்னும்போது அவர் மரக்கறி யுணவே கொள்பவர் என்னும் பொருள்படும்போது, உயிர்களைக் கொன்று தின்னும், திருநீறுபூசிகளை, சைவசமயத்தில் பிறந்தவர்களை எப்படிச் சைவர்கள் என்று கூறக்கூடும்?

இவைகளை இளைஞர்கள் சிந்தித்தால், இன்றியமையாத நற்பயன் உண்டாகும் என்பது கருதியே, இங்கு இதுபற்றி அழுத்தமாகச் சொல்லலானேன். இளைஞர்கள் ஒருமிக்கத் திருந்திவிட்டால், இனி வருங்காலத்தில், உணவில் குறைபாடு இல்லாமல் இனிது வாழலாமன்றோ?



இதுபோது, இன்னொரு பக்கத்தையும் சிறிது வற்புறுத்திக் கூறவேண்டியிருக்கிறது. இயல்பாகவே சைவ உணவு கொள்பவரும், சீர்திருந்தி சைவ ஆகாரம் புசிப்பவர்களும், இன்னும் திருந்தாத நிலையில் இருக்கின்ற சகோதர சகோதரிகளை இழிவாகக் கருதிப் புறக்கணித்துவிடலாகாது. அவர்களைத் தங்களில் ஒருவராக எண்ணி அணைத்துத், திருத்துவதற்குப் பலவகையாலும் முயலவேண்டும். ஒரே பரம்பரையில், சில குடும்பந் திருந்தி யிருக்கும்; சில குடும்பம் அருந்தியிருக்கும். ஒரே குடும்பத்தில், கணவன் சைவமாயிருப்பான்; மனைவி அசைவமா யிருப்பாள். இப்படிப்பட்ட நிலைகளிலெல்லாம் மிகப் பரந்த நோக்கம் வேண்டும்; அடர்ந்த அன்பு வேண்டும்; தற்பெருமையற்ற உள்ளம் வேண்டும்; அவனருளாலே ஆட்படுத்த எண்ணும் உறுதியும் கனிந்த நெஞ்சமும் வேண்டும். இவை யில்லாத குறை பெருங் குறையாயிருக்கிறது.

## IV முன்னேறும் முறைகள்

### (i) தூய வாழ்க்கை

சைவ மக்கள் முன்னேற வேண்டுமாயின், சைவசமயம் தழைத்தோங்க வேண்டுமாயின், சைவராயினோர் ஒவ்வொருவரும், சைவ இளைஞர்கள் ஒவ்வொருவரும், தூய்மையான வாழ்க்கை வாழவேண்டும்.

**(அ) தூய உணவு**

தூய வாழ்விற்கு அடிப்படையும் திறவுகோலும் போன்றது மரக்கறி உணவென்னும் சைவ உணவேயாகும். சைவ சமயிகள் யாவரும் இயற்கையில் சைவராகப் பிறந்தவர்களே. பிற்காலத்தில், குடியேறிய மக்களது தாக்கினால், சிலர் புலால் உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ளலாயினர். மாமிச ஆகாரத்தை 'அன்னிய பதார்த்தம்' என்பதும், கலியாணம், முதலிய விசேடக் காட்சிகளிலே அப்புலாலுணவை நீக்கு

வதும், இறைவனுக்கு உணவு படைக்கையில் தவிர்ப்பதும், விரதநாட்களிலே ஒழிப்பதும் புலாலுண்ணும் குடும்பத்தினரும், அவர்களோடு பழக்கமுடைய ஒவ்வொருவரும் அறிந்த உண்மைகளேயாகும். நமக்கு அன்னியமான உணவையொழித்து, உரிமையான உணவைக் கொள்ளச் சைவர் ஒவ்வொருவரும் முயலவேண்டுமென்று சொல்லவேண்டுமா?

இலாபம் ஒன்றையே பொருளாகக் கருதி, மக்களை மயக்கி இழுக்கவல்ல, நாக்கு நாடும், பண்டங்களைப் புதுப்புதுப் பெயரோடு செய்து விற்கும் சிற்றுண்டிச் சாலைகட்குச் செல்வதும் தூய்மையற்ற செய்கையென்பதை இளைஞர்கள் நன்கு உணரவேண்டும். இன்றியமையாத காலத்துத் தவிர, சோற்றுக் கடைகட்கும், சிறுதிண்டிப் பண்டகசாலைகட்கும் போதலே கூடாது.

(ஆ) பெரியோர் பணிவு

இக்காலத்து இளைஞர்கள் பெரியோர்களிடத்து, வயதிலோ, அறிவிலோ, நிலையிலோ, ஒழுக்கத்திலோ மூத்தவர்களிடத்துப் பணிவாக நடந்து கொள்வதில்லை என்னும் குறையிருந்து வருகிறது. அத்தகைய குறைபாடு நம் சைவ இளைஞர்கள்பால் தோன்றுதலாகாது. பணியத்தகாதவரிடத்தும் பணிந்து போவதனால் குறை எதுமில்லை. ஒருவரது உயர்ந்த நிலையையும், உன்னத அறிவையும், சிறந்த ஆற்றலையும், நிறைந்த பொருளையும், மேலும் பெருமையாகத் தூக்கிக் காட்டுவது பணிவே யல்லாமல், 'நம்மைப்போல் யார் இருக்கின்றனர்?' என்ற இறுமாந்த எண்ணமல்ல. "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்பது தமிழ்மறையின் கட்டளை.

பணிவில்லாதவனை நல்லவர்கள் சட்டை செய்யமாட்டார்கள். ஆகவே, நல்லோர் இணக்கம் வேண்டுமானால், மற்றப் பண்புகளோடு, பணிவு அவசியம் இருந்தாகல் வேண்டும். ஆன்மா சார்ந்ததின் வண்ணமாவது. ஆகையினால், உயிர் நற்கதியடைவதற்கு நல்லவர் கூட்டம் இன்றியமையாதது என்பதை இறையடியவர்களெல்லாம் இடித்து இடித்துச் சொல்



லிப்போந்தனர். அத்தகைப் பெரியோர் சேர்க்கையைக் கூட்டுவிக்கவல்ல பணிவைப்பற்றி எவ்வளவுதான் உயர்த்திச் சொல்லலாகாது?

(இ) மெய்யே பேசல்

இம்மாபெருங்கழகத்திற்குத் தலைவனாயிருப்பதுபோய், நீதிபோதிக்கும் வகுப்பின் ஆசிரியனாக ஆய்விடுகிறேனோ என்று அஞ்சுகிறேன். மெய் பேசவேண்டும் என்பதுபற்றி உங்களுக்கு அதிகம் ஏதும் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. தூயவாழ்க்கைக்குச் சத்தியமே பேசுதல் என்பது இன்றியமையாததொரு பகுதியாகும் என்பதை மாத்திரம் உறுத்துக் கூறுவது அடியேனது கடமையாகும். பொய்யன் ஒருவனைத் தூய வாழ்க்கையுடையவன் என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். மெய்யே பேசும் வழக்கமுடையான், வஞ்சகம், மோசம், பொறாமை முதலிய தீயபண்புகளைத் தன்னுள்ளத்திலே பொதிந்து வைத்துக்கொண்டிருக்க முடியாது. மெய்யுடையவன் வழியே உலகம் நாட்டங்கொண்டு செல்லும். சத்தியத்தைக் கடைப்பிடித்த நம் நாட்டுப் பெரியார்களை உலகம் முழுதும் எங்ஙனம் போற்றுகின்றதென்பதை நீங்கள் அறிவீர்கள்.

(ஈ) பெற்றோர்ப் பேணல்

பெரியோரைப் பணிதல் என்னும் தலைப்பிலேயே இதுவும் அடங்குமாயினும், தனியே இதைப்பற்றிச் சில சொல் பகரவேண்டியிருக்கிறது.

'இளைஞர்கள் ஒருத்தியை மணந்ததும், வயது சென்ற தங்கள் அன்னை தந்தையரை மறந்துவிடுகிறார்கள், அவர்களுக்கு உரிய உபசாரங்களைச் செய்வதில்லை' யென்று எனது நண்பரொருவர் கூறினார். பெற்று வளர்த்த தந்தையையும் தாயையும் போற்றாத இளைஞனை, நன்றியற்ற சிறுவனைத், தூய வாழ்க்கையுடையவன் என்று யார் ஒத்துக்கொள்வார்கள்? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற அருமை நீதியை நமது இளைஞர்கள் கடைப்பிடிப்பார்களாக.

### (உ) அறவழியில் பொருளீட்டல்

'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்பது எல்லோருக்கும் தெரியும். அப்பொருளைத் திரைகடலோடியும் தேடுதல் வேண்டும் என்பதையும் அறிவோம். ஆனால், அப்படித் தேடும் முறைகள் சிறிதும் தூய்மை குறைந்தனவாக இருத்தலாகாது என்பதைச் செவ்வையாக மனதில் பதித்துக் கொள்ளுதல் அவசியம். இக்காலத்தில் பொருளீட்டும் வழிகளை உள் நுழைந்து பார்க்கப்போனால், அம்மம்ம! என்ன கேவலமானவைகளாக, எவ்வளவு படுகேடானவைகளாக, எம்மட்டு அசுத்தமானவைகளாக இருக்கின்றன!

இளைஞர் பெருமக்களே! நீங்கள் உண்மையாக உயர்வடையவேண்டுமானால், நமது சமயமும், நமது சமூகமும், நமது நாடும், மெய்யாக மேன்மையுற வேண்டுமானால், உங்கள் செல்வம் உங்களுக்கு உரிய நன்மைகளையெல்லாம் பயக்கவேண்டுமானால், நீங்கள் பொருளீட்டும் துறைகளை மிகத் தூய்மையாக, மிக மிகப் பரிசுத்தமாக வைத்திருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தவறான வழியிலே, தகாத முறையிலே, ஒரு காசு வந்து சேர்ந்துவிடுமானால் அது உண்மைநெறியில் சம்பாதித்த ஒன்பது காசுகளை அடித்துக் கொண்டு போய்விடும் என்பதைத் திண்ணமாக நம்புங்கள்.

பயிர்த்தொழிலிலாயினும் சரி, வியாபாரத்திலாயினும் சரி, கைத்தொழிலிலாயினும் சரி, எத்தொழிலிலாயினும் சரி தூய்மையான முறைகளையே கையாளுங்கள். உழைப்புக்கு ஏற்ற இலாபத்தை எதிர்பாருங்கள். அதிக ஆசைவைத்துத் தூய்மையற்ற முறைகளுக்கு அடிமையாகாதீர்கள்.

### (ஊ) எளிய நடையுடை

பொருளீட்டுவதிலே தூய்மையற்ற துறைகளில் இறங்க வேண்டிய அவசியம் வருவதெல்லாம், வாழ்க்கைத்திட்டத்தை வீணாக உயர்த்திக்கொள்வதனாலேயாகும். எளிய உடை, எளிய போக்காக இருக்க மனதைப் பழக்கப்படுத்திக்கொண்டால் எவ்வளவு குறைந்த வருவாய் வந்தால்தான் என்ன?



"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

பொருள் நிரம்ப நியாய வழியிலேயே வருங்காலத்திலுங்கூட, வாழ்க்கை நிலையை, ஆடையாபரணங்களை அளவுக்கு மீறி உயர்த்திக்கொள்ளுதல் ஆகாது. நாம் சம்பாதிப்பது நமக்கே போதாதபடி படாடோப வாழ்க்கை நடத்திவந்தால், நாம் எப்படி பிறருக்கு உதவியாய் இருக்க முடியும்? இன்றியமையாது செய்யவேண்டிய உற்றார் உறவினர் கடமைகளையாவது செய்ய இயலும்?

### (எ) கடவுள் கொள்கை

தூய வாழ்க்கைக்கும் கடவுள் கொள்கைக்கும் ஏதும் சம்பந்தமில்லையென்று சொல்வார் இக்காலத்தில் பலர் உளர். என்றாலும், கடவுளிடத்தே பற்றுவைத்துக் கனிந்த அன்பு செய்து, தூய நல்வாழ்வு நடாத்திவரும் பேறினாது தினசரி வாழ்க்கையைக் கேட்போமானால், எல்லாம்வல்ல அருட் பரம்பொருள் தோன்றாத்துணையாயிருந்து ஒவ்வொரு நிமிஷத்திலும் எப்படி வழிகாட்டி வருகின்றார் என்பதையறிந்து மகிழலாம்.

மனித அறிவு மிகக் குறுகியதாகவும் கட்டுப்பட்டதாகவும் இருக்கின்றதென்பதை நாம் முதலில் நன்றாக உணரல் வேண்டும். உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும், உலகத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய பொருள்களையும் இச் சிற்றறிவு கொண்டே முற்றும் அறிந்துவிடுதல் கூடும் என்னும் நம்பிக்கையையும் விட்டுவிடுதல் வேண்டும். இந்த நேரத்தில் நாம் நன்றாகத் தெளிவாகப் பேசிக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருக்கும் இதே நேரத்தில், நம் முதுகின் பின்னால் என்ன நடக்கின்றதென்பது நமக்குத் தெரியாதே! எங்கும் உள்ள பொருளை, எல்லாவற்றையும் ஆளும் வஸ்துவை, அதற்கேற்ற முயற்சியும் உழைப்பும் கொள்ளாமல், நினைத்த மாத்திரத்தில் கண் எதிரே காணவேண்டுமென்பது என்ன மடமையாகும்.

நமது சமயத்திலே, இத்துறையில் முயற்சி செய்து பயன் அடைந்த பெரியார் பலர் இருக்கின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். கடவுள் இருக்கின்றார் என்னும் நம்பிக்கையுடன் தொடங்கி உழைத்து, இறுதியில் இறைவனை நேராகக் கண்டு அநுபவித்து அடியில் வருமாறு பாடிய மாணிக்கவாசக சுவாமிகள் நமது சமய குரவரில் ஒருவர் என்பது உங்களுக்குத் தெரியாதா?

"சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லைக் கண்டேனே"

"பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லைக் கண்டேனே"

இவ்வாறு அநுபவித்துப் பாடிய அருட்டிருப் பாட்டுக்கள் நமது சைவத் தமிழில் எத்தனையோ யிருக்கின்றன! அவைகளை உருக்கத்துடன் நாம் படித்துக் கொண்டிருத்தல் ஒன்றே போதுமே இறைவனைக் காண்பதற்கு.

'கண்டால்தான் நம்புவேன்' என்ற வாதம் நமது இளைஞர்கள் செய்யமாட்டார்கள். நம்பித் தொடங்கி, நாள் தோறும், தேவார திருவாசகங்களிலும், பிற திருமுறைகளிலும், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கசுவாமிகள் முதலிய பெரியார் பாடல்களிலும் மனம் விரும்புமட்டும் முறையாகப் படித்து வாருங்கள். கந்தர் அநுபூதி, கந்தர் கலிவெண்பா, சண்முக கவசம், கந்தர் அலங்காரம், திருவகுப்புகள், திருமுருகாற்றுப்படை இவற்றைக் காலை மாலை பாராயணம் செய்து வாருங்கள். திருப்புகழைப் பாடிப்பாடி அதனோடு ஈடுபடுங்கள். சில காலம் இவ்வாறு சென்றதுமே, வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியிலும் ஏதோ ஒருபொருள் தோன்றாத் துணையாயிருந்து வழிகாட்டி வருவதை நீங்கள் ஒவ்வொருவரும் இனிது உணர்வீர்கள்; நாளொடு நாள் தூய



வாழ்க்கை செய்யத் தூண்டுவதை நீங்கள் அநுபவமாகக் காண்பீர்கள்.

## (ii) சமய வளர்ச்சி

சைவ இளைஞர்கள், தூயவாழ்க்கை வாழ்ந்துகொண்டு சமயத்தை வளர்க்க முயலவேண்டும். சைவம், உண்மைச் சைவம் உலகெங்கும் பரவத் தொண்டு புரியவேண்டும். நமது மதம் பூமியிலுள்ள சகலருக்கும் பொதுவானது; எல்லோரையும் ஆட்கொள்ளும் பெருந்தன்மையது; உலகிலுள்ள எல்லா மதக் கொள்கைகளையும் சமரசப்படுத்தித் தன்னகத்தே கொண்டது; "எங்கள் வீட்டுச் சைவம் உங்கள் வீட்டுச் சைவம்" என்று கட்டுப்படுத்திக் கூறுதற்குரிய சிறிய சமயமல்ல.

ஆனால் அநுபவத்தில் அப்படியில்லாதது வருந்தத் தக்கதே. சைவ சமயத்தைக் கையாளும் மக்களில் சிலர் குறுகிய நோக்கமுடையவராயும் இருக்க நேர்ந்து விடுதலின், பரந்த இச்சமயத்திற்கு எல்லைகள் கோலி, வரப்புகள் வைத்துத் தங்கள் மனம் குறுகியிருப்பதுபோல இதையும் குறுக்க முயல்கிறார்கள். ஆனால் அம்முயற்சி யெல்லாம் இச் சமயத்தண்டை ஏதும் செய்யாது.

சைவத்தின் பரந்த தன்மையினை உலகம் உணரும்படி செய்வது நம் கடமை. நம் மக்கள் சமய நல்வாழ்க்கை செய்தற்குரிய வசதிகளைத் தேடிக் கொடுப்பது இளைஞரது நோக்கமா யிருத்தல் வேண்டும். ஆங்காங்கே சைவசமய சங்கங்கள் நிறுவி, அவற்றின் வழி மக்களை நன்னெறிக்கு ஆளாக்க உழைக்கவேண்டும். இச் சிறுசிறு கழகங்களெல்லாம் தாய்க் கழகமாகிய சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு இணைந்து, நம் சைவ நாடு முழுதும் ஒரே முறையாக ஒழுங்காகச் சமயப் பிரசாரம் செய்வதற்கு ஒருப்படவேண்டும்.

சைவ சமய நூற்களைத் துருவித் துருவிப் படித்துத் தெள்ளத் தெளிந்த தமிழில் அவற்றின் கருத்துக்களை வடித்துப் பொது மக்களுக்கு வழங்கவேண்டும். ஆங்கிலங்

கற்ற சைவ இளைஞரெல்லாம் இத்துறையில் பெரிதும் ஈடுபட வேண்டும். ஆங்கில ஆராய்ச்சி முறைகளின் துணையால் சமய நூற்களை ஆராய்ந்து அழகிய சமயப் புத்தகங்களை எழுதிக் குவிக்க வேண்டும்.

## (iii) தமிழ்மொழி வளர்ச்சி

நமது மொழியின் மாண்பு நமது ஆர்வக் குறைவினால் உலகினுக்கு உள்ளவாறு புலனாகாமல் இருக்கின்றது. அக்குறையை யொழித்துத், தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி என்னும் உண்மையினை மேல்நாட்டாரும் ஒத்துக்கொள்ளும்படி செய்தல் வேண்டும்.

தமிழிலே அறிவியற் கலைநூல்கள் இல்லையென்னும் குறையை ஒழிக்க ஒவ்வொரு இளைஞரும் பாடுபட வேண்டும். ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு பாடமும் இந்துஸ்தானியில் சொல்லிக்கொடுப்பதை நீங்கள் அறிவீர்கள். அரசாங்க ஆணையால் எல்லாக்கலைகளும் அம்மொழியில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன என்பதும் உங்களுக்குத் தெரியும். அம்மாதிரி நமது மொழியிலும் செய்ய நாம் கூக்குரலிட வேண்டும்; கிளர்ச்சி புரிய வேண்டும். விடாமுயற்சி செய்ய வேண்டும்.

## (iv) உலகியலில் உயரல்

சைவ இளைஞர்கள் அரசாங்கத்திலும், பிற ஸ்தாபனங்களிலும் உயர்ந்த நிலைகளை அடையவேண்டும். இங்குக் கூடியுள்ள இளைஞர்களில் நான்கு பேர் I. C. S. ஐ. ஸி. எஸ். ஆகவும், நான்கு பேர் I. P. S. (இந்தியன் போலிசு சர்விஸ்) ஆகவும், நான்கு பேர் அந்த உயர்ந்த உத்தியோகத்திலும், நான்கு பேர் இந்த உயர்ந்த உத்தியோகத்திலும், நான்கு பேர் அரசியல் தலைவர்களாகவும், நான்கு பேர் அறங்கூறும் பேரறிஞராகவும் இருந்தால் எவ்வளவு அழகாய் இருக்கும்.

எந்தச் சமயமும் எந்தச் சமூகமும் செல்வாக்கு இருந்தால்தான் ஓங்கி வளரும். நமது இளைஞர்கள் பல உயர்ந்த



நிலைகளில் இருந்துகொண்டு சமயத்தையும் புரந்து வருவார்களானால், அம்மம்ம! என்ன நன்றாயிருக்கும்! சமயம் எவ்வளவு வளமுற்று வளரும்! மக்கள் சமயத்தின் பயனை எத்துணைப் பெருவாரியாக நுகர்வார்கள்.

## (v) மக்கள் பணி

“அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே”

சமூகத் தொண்டு செய்வதிலே சைவ இளைஞர்களுக்குப் பேரூக்கம் இருத்தல் வேண்டும். நமது சமூகத்திலேயுள்ள குறைபாடுகளை நீக்கிச் சீர்திருத்த வேண்டியது இளைஞர் கடமையேயாகும். முதியவர்கள் பழைய குருட்டு வழக்கங்களிலேயே உள்ளத்தைப் பதித்தவர்களாய்க் காலங் கழித்துப் போகட்டும். அவர்களைத் திருத்த இயலாது. இக்காலத்து இளைஞர்கள் முனைந்து திருந்திவிட்டால் பிற்காலத்திய உலகம் தானாகத் திருந்தியதாகத் திகழ்ந்துவிடுகிறது.

நல்லதிற்கும் பொல்லதிற்கும் நாம் செய்யும் சடங்குகளும் பிறவும் பொருத்தமானவைதானா? இக்காலத்திற்கு அவசியமானவை தானா? எவை எவை மூடக்கொள்கைகளாகும்? எவ்வெவற்றில் இன்னும் ஆராய்ச்சி தேவை? என்றவாறெல்லாம் சிந்தித்துச் செய்யத் தக்கனவற்றை இன்னும் விளக்கமாகச்செய்யவும், செய்யத்தகாதனவற்றை அஞ்சாமல் ஒழிக்கவும் முயலவேண்டும்.

தமிழர்களுக்குள்ளே ஜாதிபேதங் கிடையாது. “சாதி இரண்டொழிய வேறில்லை,....இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்” என்று தமிழ் நீதி நூல்கள் முறையிடுகின்றன. தமிழர்களாகப் பிறந்த நாம், நம்மிடையே பிறப்பினால் ஜாதிபேதம் கற்பிக்கும் கருத்தை வளரவிடலாகாது. பிறப்பு ஒன்று கொண்டே ஒருவரைத் தீண்டலாமென்றும் தீண்டக் கூடாதென்றும் தப்பான கட்டுப்பாடுகள் வைத்துக்கொள்ளக் கூடாது. இவ்வாறான வித்தியாசங்கள் பாராட்டுபவர் உண்மைச் சைவராகார்.

இதுபோழ்து சைவ இளைஞர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நமது மதம் எவ்வளவோ பரந்ததாயிருந்தும், வழக்கத்திலே, பிறப்பினால் ஜாதி உண்டு என்று சாஸ்திரங்கள் எழுதிவைத்துக்கொண்டிருக்கும் வகுப்பினரைக் காட்டிலும், நாம் நமது சகோதரர்களிடத்துக் கடுமையாக இருக்கின்றோம். அப்படியிருப்பதற்கு நமது சமயம் இடங் கொடாது. ஆகவே, நாம் செய்வது மிக்கத் தவறான காரியம் என்பதை யுணர்ந்து காலந் தாழ்க்காது குறைகளை யொழிக்க முன்வரவேண்டும். இல்லாவிட்டால் நமது சமயத்துக்கு நாம் துரோகம் செய்தவர்களாவதோடு, மற்றவர்களைக்காட்டிலும் நாம் எவ்வகையிலும் மேலானவர்கள் ஆகமாட்டோம்.

## V முடிவுரை

**சிவஞானச் செல்வர்களே !**

எனது சொற்பொழிவை முடித்துக்கொள்ளு முன்னர் இன்னும் இரண்டொரு சொல் சொல்ல விரும்புகிறேன்.

இதுவரை கூறியவெல்லாம் இளைஞர்களையேபற்றி என்று சைவப் பெரியார் கருதிவிடலாகாது. இளமையென்பது வயதினால் கட்டுப்பட்ட பொருள் அல்ல. இளமை என்பது ஓர் உணர்ச்சி. அவ்வுணர்ச்சி இளவயதிலே நிறைந்திருக்கிறதென்பது உண்மைதான். ஆனாலும், இவ்விளமை உணர்ச்சி ஒருவனது ஆயுட்காலம் முழுவதும் இடைவிடாது இருந்து எழுச்சி தரும் தன்மைத்தாகும். வயதிலே மூத்துக்கொண்டு வந்தாலும் உணர்ச்சியிலே இளமை மாறாமல் இருக்கமுடியும். இளமைத் தன்மை குறைந்தாலும் மறுபடியும் அத்தன்மையை வளஞ் செய்துகொள்ளக்கூடும்.

எனவே, இங்குக் குழுமியுள்ள பெரியாரில் பலர் இளமையுணர்ச்சி நிறைந்தவர்களாக இருக்கலாம். நிறையப் பெறாதார்களும் இவ்வுணர்ச்சியை வளர்த்துக்கொள்ளலாம். உலக வளர்ச்சிக்கே இவ்விளமை உணர்ச்சிதான் வேண்டியிருக்



கிறது. இளமையின்றேல் உலகமில்லை. இளமையில்லாமல் எம்மனிதனும் இருத்தலாகாது. எல்லோரும் இளைஞரே. தன்மையிலும் அளவிலுந்தான் வேறுபாடு உண்டு. ஊக்கங் கொண்டு இளமை எண்ணத்தை நிரப்பிக்கொண்டால் வயதில் சிறியரைப்போல் மூத்தாரும் இளைஞரே யாவர்.

நெடுநேரம் பேசிச் சென்றுவிட்டேன். அடியேனது புன்மொழியை இதுகாறும் பொறுமையாயிருந்து கேட்ட உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது அன்பார்ந்த நன்றி பல. மூலையிருந்தானை முற்றத்தே விட்டுவைத்த சாலப் பெரிய சைவசித்தாந்த மகாசமாஜத்தினருக்கும் எனது அன்பும் பணிவும் பலப்பல.

> "குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர்தடிந்தாய்!
> புன்றலைய பூதப் பொருபடையாய்!—என்றும்
> இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
> உளையாய்! என் னுள்ளத் துறை."

# நல்வரவேற்பு*

## ஆசிரியவிருத்தம்

பூவில்அயன் மால்முதலோர்க் கழலுருவாய்நின் றருளும் புகலி யர்க்கு, வாவிமணிச் சிவிகைதரும் கெடிலநதி வாச கர்க்கு வழிவிட் டேகும், நாவிலுயர் நம்பிதடுத் தாளவரும் மெய்கண்டார் நலங்கி ளர்மெய், மாவியலார் இனியதமிழ் மணங் கமழும் நடுநாடாம் மாண்பார் நாட்டில். (க)

தாயனைய காராளர் குலமரபிற் குயர்வளிக்கும் தகைமை சான்ற, ஆயபுகழ் திருநாவுக் கரசுகரை யேறவிட்ட அண் ணல் எங்கோன், ஏயதிரி புரமெரித்தும் நடனதரி சனமளித் தும் இறும்பூ தெய்த, நாயகன்நல் மனவாச கங்கடந்தார் திருவதிகை நகரென் பாரால். (உ)

இந்நகரில் உயர்சைவ சித்தாந்த சமாசத்தில் இனிமை யெய்த, மின்னியஇவ் வாண்டுநிறை விழாவதனைத் திறக்க நனி வேண்டும் வான்தோய், தன்னிகரில் புலிசைவரு ஞானி யார் மடாலயத்துத் தலைமை பெற்ற மன்னுசிவ சண்முக மெய்ஞ் ஞானசிவா சாரியரே வாரீர்! வாரீர்! (ங)

அருமைதவழ் உலகியலை நன்குணர்ந்தும் பொதுநன் மைக் கான வெல்லாம், பெருமைபெற வளர்த்துவரும் பேர் பெரிய மகிபா!நின் பிறங்கு வாய்மை, மருவியசொற் பொழி

---

*இது இச்சமாஜப் போஷகரி லொருவராகிய பண்டிதாத்தி னம் - ஸ்ரீ புழலை. திருநாவுக்கரசு முதலியார் (*Mirasdar & Honorary Magistrate, Sembiam.*) இயற்றியது; திருவதிகை யில் நடந்த சமாஜ விழாவில் சிறப்பாளர்க்கும் தலைவர்கட்கும் அளிக் கப்பெற்றது.



வைக்கேட் டகமகிழச் சமாஜத்தில் வழங்கு மாறு, திருவிகலி யாணசுந் தரச்செல்வா! தலைமைவகித் திடவே வாரீர்! (ச)

எங்குமுயர் சென்னைசர்வ கலாசாலைச் சங்கமதில் எழில் மிக் கார்ந்த, பொங்குதமிழ் வித்துவான் பரீட்சையிற்றேர்ந் தாராய்ச்சி புரிய வல்ல, துங்கமிகும் தொழிலிலமர்ந் துயரிய நல் தாணுவமை தூய்மைத் தாய, மங்கையர்மா நாட்டிற்குத் தலைமைவகித் திடநன்கு வாரீர்! வாரீர்! (ரு)

தருவநிறை சென்னைநகர் கூட்டுதவிப் பதிவாளர் தொ ழில்மேற் கொண்டோன், பெருமிதங்கொள் அணிவயல்சூழ்ந் தொளிர்கீழச் சேரிநகர் பெருந்த வத்து, வருகுரிசில் இராம லிங்கச் செல்வ!இவ் விளைஞரா து மாநாட் டிற்குத், திருவளர் நல் தலைமைவகித் தணிபெறச்செய் திடவரிய செம்மல்! வாரீர்! (சு)

## வாழி - வெண்பா

மன்னு திருவதிகை மாமநுநீ றக்கமணி
துன்னுந் திருத்தொண்டர் தூயதமிழ்—பன்னரிய
கற்றவர்கள் வாழ்க கவின்சைவ சித்தாந்தம்
உற்றசமா சம்வா முயர்ந்து.

# அன்பர் பிரிவு

(நமது சமாஜ இணைப்புற்ற) சைதாப்பேட்டை திருக்கார ணீசுவரர் தமிழ் வேதபாராயண பக்த ஜனசபையின் தலை வர் திரு. எஸ். இரத்தினவேல் முதலியாரவர்கள் 17-1-35ல் சிவபதமடைந்த செய்தியை [illegible] றோம்.

187103

உ

சிவமயம்

# சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

# ௯௦-ம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள்

[குறிப்பு:—கீழ்வரும் பெயர்கள் ஒவ்வொன்றின்முன் ‘சைவத் திருவாளர்’ என்றும் பின் ‘அவர்கள்’ என்றும் சேர்த்து வாசிக்கவும்.]

### தலைவர்

திரு. வி. கலியாணசுந்தரமுதலியார்

### உதவித் தலைவர்கள்

அ. சோமசுந்தரம் செட்டியார்
ச. சச்சிதாநந்தம் பிள்ளை

### பொதுக் காரியதரிசி, பத்திராசிரியர்

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

### பொருட்காப்பாளர்

தி. க. சுந்தரம் பிள்ளை

### உதவிக் காரியதரிசி

கீ. இராமலிங்க முதலியார்

### உதவிப் பத்திராசிரியர்

அ. சிதம்பரநாத செட்டியார்

### ஏனைய திருவாசக சபையினர்

கச்சி - முனிசாமி உடையார்
பாலி - சு. நெல்லையப்பர்
பி. தியாகராஜ பிள்ளை
கின்றை - தங்கவேல் முதலியார்
சி. அரங்கநாத முதலியார்
எம். உமாபதி
மறை - திருநாவுக்கரசு
தாணு அம்மாள்
ச. நடேச முதலியார்
எஸ். வையாபுரிப் பிள்ளை
திரு. வி. உலகநாத முதலியார்
தி. நல்லசிவன் பிள்ளை

### வரவேற்புக் காரியதரிசி

புரிசை - முருகேச முதலியார்

### மாதக்கணக்குப் பரிசோதகர்

க. இரத்தின முதலியார்

### ஆண்டுக்கணக்குப் பரிசோதகர்

ஈ. ந. தணிகாசல முதலியார்

### பத்திராசிரியக் கழகம், பணியாளர் கழகம்

ந. மு. வேங்கடசாமி நாட்டார்
மா. வே. நெல்லையப்ப பிள்ளை
மு. கதிரேசச் செட்டியார்
ச. சச்சிதாநந்தம் பிள்ளை
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
சாமி - வேலாயுதம் பிள்ளை
அ. சோமசுந்தரம் செட்டியார்
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
அ. சிதம்பரநாத செட்டியார்

### ஆராய்ச்சிக் கழகம்

மு. கதிரேசச் செட்டியார்
கா. சுப்பிரமணிய பிள்ளை



ந. மு. வேங்கடசாமி நாட்டார்
ச. சச்சிதாநந்தம் பிள்ளை
ம. சுவாமிநாத சிவாசாரியார்

## வெளியூர் ஆலோசனை சபை

### செங்கற்பட்டு

வா. தி. மாசிலாமணி முதலியார்
கா. வேதாசல முதலியார்
அ. மு. பரமசிவாநந்தம்

### வட ஆர்க்காடு

கே. எஸ். மல்லப்பச் செட்டியார்
வா. கி. ஞானகிராம முதலியார்
வி. எம். இராமநாத முதலியார்

### தென் ஆர்க்காடு

சொ. இராஜகோபால செட்டியார்
பு. வெ. தேவராஜ முதலியார்
எம். சின்னசாமி ரெட்டியார்

### தஞ்சாவூர்

த. பா. சிவகுருநாத பிள்ளை
கீ. கந்தசாமிப் பிள்ளை
ந. மு. கோவிந்தராய நாட்டார்

### திரிசிராப்பள்ளி

பி. மாணிக்க செட்டியார்
அ. மு. சரவண முதலியார்
எஸ். கனகசபாபதி பிள்ளை

### இராமநாதபுரம்

தெ. பழ. சித. சதாசிவ செட்டியார்
சி. ராம. மு. லெ. இலக்குமண செட்டியார்
லெ. நா. இலக்குமண செட்டியார்

### திருநெல்வேலி

கா. சுப்பிரமணிய பிள்ளை
ந. சிவகுருநாத பிள்ளை
மா. வே. நெல்லையப்ப பிள்ளை

### மதுரை

எம். எல். இராமசாமிப் பிள்ளை
எஸ். முத்துக்கருப்ப பிள்ளை
கே. கோதண்டபாணி பிள்ளை

### கோயம்புத்தூர்

பி. வேங்கடாசல முதலியார்
சி. எம். இராமச்சந்திர செட்டியார்
பி. காளத்தி முதலியார்

### திருவிதாங்கூர்

ஈ. பதுமநாபப் பிள்ளை

### பெங்களூர்

வி. சே. ஆறுமுக முதலியார்

### புதுக்கோட்டை

வ. பழ. சா. சாமிநாத செட்டியார்
ம. பெரி. வீர. அழகர்சாமிவேளர்

### சேலம்

அ. வரதநஞ்சைய பிள்ளை
அ. மாணிக்க செட்டியார்
வீ. உலகவூழியனார்

### நீலகிரி

வை. குஞ்சிதபாதம் பிள்ளை

### சிற்றூர்

மோஹனவேல் செட்டியார்
இராஜவேல் முதலியார்
சி. நரசிங்க முதலியார்

### புதுச்சேரி

சி. அண்ணாமலை முதலியார்

## சமாஜ விழாவில் திருவதிகையில் நிறைவேறிய

# தீர்மானங்கள்

1. இம்மாகாணத்துக் கலாசாலைகளில் தாய்மொழிகளைக் கற்பிக்கும் பண்டிதர்களின் குறைந்த சம்பளத்தை மேலும் குறைக்கும்படி அரசாங்கத்தார் சில நாட்களுக்கு முன் பிறப்பித்த உத்தரவானது பண்டிதர்கள் நிலைமையைத் தாழ்த்தித் தாய் மொழியின் வளர்ச்சியைத் தடுக்குமாகையால், அவ்வுத்தரவை மாற்றிப் பண்டிதர்களை நன்கு மதித்து அவர்கள் சம்பளத் திட்டத்தை உயர்த்தவேண்டு மென்று இச்சைவர் மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது. (இது சைவர் மகாநாட்டில் தலைவர் பிரேரணையின் பேரில் ஏகமனதாக நிறைவேறிற்று.)

2. சமாஜத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்குமாறும், சமாஜ வெளியீடுகளை விற்பனை செய்யுமாறும், அங்கங்கே சைவ இளைஞர் சபையை ஏற்படுத்திச் சைவச் சொற்பொழிவுகள் செய்யுமாறும் இம்மகாநாடு சைவ இளைஞர்களை வேண்டிக் கொள்கின்றது (2—8 தீர்மானங்கள் சைவ இளைஞர் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறின.)

3. பன்னிரு திருமுறை முதலிய தெய்வப் பனுவல்களை இயன்ற அளவு பாராயணஞ் செய்தல், சைவ சாத்திரங்களை ஆராய்தல் முதலிய சைவத் துறைகளில் ஈடுபட்டு ஒழுகுமாறு இம் மகாநாடு சைவ இளைஞர்களை வேண்டிக்கொள்கிறது.

4. உலக மெங்குமுள்ள சாரணியக்கம்போல நம்பாரத நாட்டில் பல சாரணியக்கங்களை நடத்தி வருவதுபோல், சாரணியக்கத்தின் அம்சங்கள் யாவும் பொருந்திய "இளஞ் சைவத் தொண்டர் குழாம்" என்று ஒன்று நிறுவப்படவேண்டும்; அதற்குரிய சட்டதிட்ட ஒழுக்கங்களை வகுத்து, சமய சம்பந்தத்திலே வேறுகாத பொதுஜன ஊழியத்தை மேற்கொண்ட இவ்வியக்கம் நமக்கு அவசியம் வேண்டற்பாலது.

5. நம் சமாஜத்தார் துவங்கியுள்ள சைவப் புலவர் தேர்விற்கும் இளஞ் சைவப் புலவர் தேர்விற்கும் ஒவ்வொரு சைவ இளைஞர்களும் கலந்து கொள்ள முற்படவேண்டு மென்று இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

6. அண்மையில் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர்கள் சம்பளத் திட்டத்தில் பண்டிதர்களின் சம்பளம் மிகவும் கீழானதாயும், அவர்கட்கு அவமானத்தை உண்டுபண்ணக் கூடியதாயும், தாய்மொழி வளர்ச்சியை அழிப்பதாகவுமிருப்பதால் இக்கீழான திட்டத்தை உடனே மாற்றி அவர்கள் தகுதிக்கேற்ற எல். டி. சம்பளத்தை வழங்கும்படி இம் மகாநாடு அரசாங்கத்தாரை வேண்டிக் கொள்கிறது.

7. ஆடம்பர மில்லாத உடை யணிதல், நாட்டின் நன்மைக்கான பொருள்களையே வாங்குதல் முதலிய நன்னோக்கங்களை மேற்கொள்ளுமாறு இம்மகாநாடு சைவ இளைஞர்களை வேண்டிக் கொள்கின்றது.

8. பல்கலைக் கழகங்களில் பதிவு செய்யப்பட்ட வித்வான் பட்டம் பெற்றவர்களுக்கு (ஆட்சியாளர் குழுவின்) அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அளிக்குமாறு பல்கலைக் கழகத்தாரை இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது (2-8 தீர்மானங்கள் சைவ இளைஞர் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறின.)

9. பெண்மக்களுக்குக் கட்டாயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்தாரை இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றது. (9 10, 11 தீர்மானங்கள் சைவ மங்கையர் மகா நாட்டில் நிறைவேறின.)

10. பெண்மக்கள் வாழ்க்கையில் சிக்கனத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு மங்கையர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

11. குழந்தைகளுக்குச் சமயக் கல்வி கற்பிக்குமாறு ஒவ்வொரு தாய் தந்தையரையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது (9, 10, 11 தீர்மானங்கள் சைவ மங்கையர் மகாநாட்டில் நிறைவேறின.)

# வாழ்த்துப்பா

[பி. கு. இராமலிங்க செட்டியார், பண்ணுருட்டி]

**வெண்பா**

திங்களொவ் வொன்றுக்குஞ் செங்கதிரோ னென்னவுதித்
தெங்க ளகத்தி னிருளறுக்கும்—பொங்கொளிசேர்
‘சித்தாந்த’ மென்னத் திகழு மதித்தாளுக்
கொத்தேது மின்றுல கத்துள்.

**பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம்**

உலகிடை யெம்போ லுயிர்க டமக்குந
லுயிரே வாழியவே!
உள்ளுறை வல்லிரு ளோட்டி விளக்கிடு
மொளியே வாழியவே!
பலகலை மன்னெழி லின்பு பயந்திடு
பான்மதி வாழியவே!
பகர்பொரு டன்மைக ளாய விடந்தரு
பதியே வாழியவே!
மலமலை வளியாய் வினைசுடு மெரியாய்
வந்தாய் வாழியவே!
மதம்வளர் மழையே சிவம்வளர் நிலமே
மன்னே வாழியவே!
மலி‘சித் தாந்த’மெனு மதிதோறு மலர்
மலர் வாழியவே!
வைதிக சைவம் விளங்க வளர்ந்திடு
மணியே வாழியவே!!

**வெண்பா**

பாராண்ட ஏனைப் பரசமயங் கட்கிறையாம்
பேராண்ட சைவப் பெரும்பணியே—ஏழாண்டாய்ச்
சூழ்ந்து மிளிர்ந்ததுபோற் சோதியுரு வோனருளால்
வாழ்ந்திடுக மென்மேல் வளர்ந்து.



உணர்ப அசத்து - நின்னாலறிவனவாய கருவிகளெல்லாம் மேற் கூறியவாற்றான் அசத்தாம், அசத்தெனவே அசித்தாதலும் பெறப் படும்.—ஆதல் ஒன்று ஒன்றை உணராது - ஆகலான் அவற்றுள் ஒரு கருவியும் ஒன்றாகிய முதற்பொருளை அறியமாட்டாது.—உணரும் நீ தான் உணராய் - அவற்றானறிந்து வருகின்ற நீதானும் அதனை அறியமாட்டாய்.—ஆயின் - நீயே ஆய்ந்தறிவாயாயின்—உணரும் உனின் தான் இரண்டு ஆம் - அவ்வாறுணரப்படும் பொருள்கள்போல் உணர்கின்ற நின்னின் வேறாம்.—மெய்கண்டான் தன்னால் உணர்த லால் தான் இரண்டாய்க் காணான் தமி - உயிர்க்கு அறிவு விளங்கு முண்மை அறிந்தோன் தன்னறிவு அச்சிவனருளினடங்கி அதுவாய் நின்று அதனானே அதனை அறியுமாகலான் ஏனைப்பொருள்களை அறியுமாறுபோல வேறாய் நின்றறிவானல்லன் அத்தனி முதற் பொருளை.

இதனாற் போந்தது சத்தாகிய சிவம் பாசஞானத்தானாதல் பசு ஞானத்தானாதல் அறியப்படாது, அறியப்படிற் குடமுதலாயின போல உயிரின்வேறாய் அவிச்சையான் வருஞ் சுகதுக்கங்களைப் பயப்பதன்றி அவிச்சையின் நீங்கிய நிரதிசயவின்பத்தினைப் பயவா தாகலான் அவ்வுண்மையுணர்ந்தோன் ஏனையபோல அசத்தாதலின் றித் தனியாய்நின்ற அம்முதற்பொருளை அதனானொற்றித்து நின்றே காண்பனென நையாயிகர் முதலியோரை மறுத்து வாக்குமனாதீத மாய் நின்றே கோசரமாமென வலியுறுத்தியவாறுமென்க.

பாவகமேல் தான்அசத்தாம் பாவனா தீதமெனில்
பாவகமாம் அன்றென்னில் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்தல் தானென்னிற் பாவகமாம் தன்னருளால்
பாவிப் பதுபரமில் பாழ்.

உ—தானே கோசரமாதலன்றித் தன்னாலறிதல் கூடாமையிற் றன்னாலே தனையுணருமென்பது தன்னைப் பற்றுதலென்னும் வழுவா மாகலின் அவ்வாறன்றி வாக்குமனாதீதப்பொருள் யோகநூலிற் கூறுந் தியானபாவனைகளிற் கோசரமாமென்றலே அமைவுடைத்தென யோக மதம்பற்றிக் கூறுவாரை நோக்கித் தன்னாலன்றிக் கோசரமாகா மையை வலியுறுத்துதனுதலிற்று.

பாவகமேல் தான் அசத்து ஆம் - நீ கூறும் பாவனை ஏனைப் பாவகங்கள்போல மனமுதலியவற்றோடு கூடி நின்று பாவிக்கும் பாவகமெனின், அறிவினலறியப்பட்ட சுட்டாகலான் அப்பொருள் அசத்தாம்:— பாவநாதீதம் எனின் பாவகம் ஆம் - கருவிகளை நீங்கி நின்று பாவிப்பதாகலின் அப்பாவனையைக் கடந்ததெனிற் கருவிகள் நீங்கிய வழி ஒன்றும் அறியுமாறின்றிக் கேவலமாமாகலான் அது பாவகமாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை :—அன்று என்னின் பாழது ஆம்.இவ்விருதிறனுமன்றி அநிருவசனமாகப் பாவிக்கப்படுவதெனின் அது சூனியப்பொருளாம் :—பாவகத்தைப் பாவித்தல் தான் என்னின் பாவகம் ஆம் - அவ்வாறன்றிப் பாவனைக் கெய்தாதபொருளை எய்தியதாகவைத்துப் பாவகஞ் செய்தலெனின் அது போலிப்பாவனையாதலாற் பாவனாதீதம்போலப் பாவனை மாத்திரையேயன்றிப் பயன்படுமாறில்லை. அற்றேல் ஒருவாற்றானும் பாவனைக்கெய்தாத பொருள் பாழாமெனின் ;—தன் அருளால் பாவிப்பது பரம் - அப்பாவகங்களையொழித்துத் தனது திருவருளாற் பாவிக்கப்படுவதாம் பரம்பொருள்,- பாழ் இல் - ஆகலான் நீ கூறும் பாவனைக்கெய்தாமைபற்றிப் பாழாதலில்லை. மேலைவெண்பாவில் தன்னென்றது தனது சத்தியே ஆகலால் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமாதல் யாண்டையதென விடுப்பார், தன்னருளாற் பாவிப்ப தென்றார். தன்னருளை அறியுமாறும் அதனாற் பாவிக்குமாறும் ஒன்பதாஞ் சூத்திரத்துட் கூறப்படும். யோகநூலார் கூறும் பாவனையாவது இந்நான்கனுள் ஒன்றாகற்பாலதன்றி வேறின்மையின் நான்கினையுங்கூறி மறுத்தார்.

அறிய இரண்டல்லன் ஆங்கறிவு தன்னால்
அறியப் படான்அறிவி னுள்ளான்—அறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யெனக்
காட்டா தறிவறிந்து கண்டு.

உ—மேற்கூறிப் போந்த பாவனைகட்கெய்தாத பொருளைத் தன்னருளாற் பாவித்தல் வேண்டாம் உயிர் பசுத்துவ நீங்கியகாலத்துச் சிவனைப்போல முற்றுமுணர்தன் முதலிய எண்குணங்களுமுடையதென்று ஆகமங்களுட் கூறுதலின் ஆண்டான்ம ஞானஞ் சிவஞானத்தோடொப்பதன்றிப் பசுஞானமெனப் படாமையான் அவ்வறிவான் அறியப்படுங் கோசரப் பொருளென்றலே அமைவுடைத்தென்னுஞ்



சிவசமவாதிகளை நோக்கித் தன்னருளாலன்றிக் கோசரமாகாமையை வலியுறுத்துதனுதலிற்று.

அறிய இரண்டு அல்லன் - சிவாகமங்களின் அத்துவிதங் கூறுதலின் உயிர் தன்னறிவானதற்குத் தன்னின் வேறல்லனாகலானும்,— அறிவின் உள்ளான் ஆங்கு அறிவு தன்னால் அறியப்படான் - சமமாதலின்றித் தூலசூக்கும முறையால் தன்னறிவுக்குள்ளுமாய் நிற்றலின் அவ்விடத்துத் தன்னறிவினால் அறியவாரானாகலானும்,—அறிவுக்குக் காட்டு ஆகி நின்றானை - தன்னறிவுக்கு வியஞ்சகமாய் நின்றறிவிக்கும் உயிர்க்குயிராய முதல்வனை,—அறிவு கண்டு அறிந்து காட்டாது - ஆன்மஞானமானது தான் கண்டறிந்து தன் குணியாகிய உயிர்க்குக் கோசரமாமாறு காட்டமாட்டாது,—மெய் அறியாக் கண் என்ன-தன்னின் வேறின்றித் தனக்குள் நிற்றலில் தன்னாற் காணப்படாது தனக்குக் காட்டாகின்ற உயிரை அறியமாட்டாத கண்ணொளிபோல்.

மெய்யறியாக் கண்போலென இயைத்துரைக்க. கண்முதலியவற்றை நோக்கி உயிர் சத்துச்சித்தாமென்றவதனை மெய்யென்றார். கண் ஆகுபெயர். கண்ணறியா மெய்யென்பதற்குக் கண்ணை அறியாத உடம்புபோலென் றுரைப்பாருமுளர். உடம்பிற்கு அறியுந் தன்மை இன்மையானும், உடம்பிற்குக் கண் காட்டாதலுமின்மையானும், அஃதீண்டு உவமையாதற்கேலாமையின் அது போலியுரை என்றொழிக.

அதுவென்னும் ஒன்றன் றதுவன்றி வேறே
அதுவென் றறியறிவும் உண்டே—அதுவென்(று)
அறிய இரண்டல்லன் ஆங்கறிவுள் நிற்றல்
அறியுமறி வேசிவமு மாம்.

உ—அத்தன்மையனாகிய முதல்வனைத் தலைப்பட்ட உயிர் அம்முதல்வனோடு ஒன்றாய்ப் போவதேயாகலின் ஆண்டங்ஙனம் அறிவதூஉம் அறியப்படுவதூஉமாதல் யாங்ஙனமென்னுஞ் சிவாத்துவிதசைவர் சுத்தசைவரை நோக்கி ஒன்றாயவழியும் அறிவதும் அறியப்படுவதுமுண்டென்பதுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

அது என்னும் ஒன்று அன்று - சத்தாகிய சிவம் ஞேயப்பொருளாய் விசிட்டமாய் நிற்பதென்பது உமக்கும் ஒக்குமாகலான், அச்சிவம்

முகத்தானும் இலக்கணமுகத்தானும் ஆராய்ச்சி செய்துணர்த்திய ஆசிரியர், அம்முப்பொருள்களது சிறப்பியல்பெனப்படும் உண்மை சாதனமுகத்தானும் பயன்முகத்தானும் ஆராய்ச்சி செய்துணர்த்துவான் புகுந்து முதற்கண் மூன்று சூத்திரங்களான் அவற்றை யறிந்து அதனுடைய பயன் பெறுதற் கேதுவாகிய சாதனங் கூறிய தொடங்கினார். அவற்றுள் இச்சூத்திரம் உணருரு வசத்தெனவும், இருதிறனல்லது சிவசத்தெனவும் மேலைச்சூத்திரத்தான் வரைசெய் துணர்த்தியவழி அங்ஙனமறியும் பொருள் அவ்விரண்டனுள் ஒன்றோ வேறோவென்னும் ஐயப்பாட்டின்கண் அவ்விரண்டினுள் ஒன்றாகற் பாலதென்பார் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சூத்திரத் திற்குப் புறனாகவெடுத்து ஒழிபாகிய சதசத்தினியல்பு வரைசெய் துணர்த்து முகத்தானே சாதித்துப் பயன்பெறுதற்குரிய அதிகாரியி னியல்பாவது இதுவென்பதுணர்த்துதனுதலிற்று.

அதிகாரமும் ஒத்தும் வேறாயவழியும் இயைபுணர்ந்து கோடற் பொருட்டுக் கருத்துரை அவ்வாறு செய்தாரென்பது. இப்புறனடையை வடநூலார் வாக்கியசேடமென்ப. இதனுட் கூறப்படு மூன்றதி கரணமும் மூன்றுபுறனடை போலுமென மலையாமைப்பொருட்டு ஓர் புறனடையென்றார். முன்னையவிரண்டும் இறுதியதிகரணத் தைச் சாதித்தற்கேதுவாய் ஒருபொருண்மேல் வந்தனவேயாம் என் பது கருத்து. ஒன்றனை யறிந்தவழி அதனுடைய பயன் பெறுதற்குரிய முயற்சி செய்யலுறுவார்க்கு அதனைச் சாதிக்குமாற்றல் தமக்குண் டென்பதூஉம், சாதித்ததனால் வரும் பயன் இதுவென்பதூஉம் அத னைப் பயப்பித்தற்குரிய சாதனமாவது இதுவென்பதூஉம் அதுவரு வாயும் உணர்ந்தாலன்றி அதன்கண் மனமெழுச்சி செல்லாமையின் ஈண்டோதப்படுஞ் சாதனஞ்செய்து பயன் பெறுதற் குரிமையுடைய அதிகாரியினியல்புணர்த்துவதாய இச்சூத்திரம் முதற்கண் வைக்கப் பட்டது.

இதன் பிண்டப்பொழிப்பு :—

மேலைச்சூத்திரத்துட் கூறிப்போந்த இரண்டனுள் வாக்குமனா தீதமாகிய சிவசத்தின் சந்நிதியின் உணருருவாகிய அசத்தெல்லாம் பாழாகலிற் சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது: அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாகலிற் சத்



தாகிய சிவத்தை அறிதல் செய்யாது: ஆதலாற் பாரிசேடவளவை யான் இருதிற னறிவுளதொன் றுண் டென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற்றன்மையு மசத்தாதற்றன்மையுமாகிய இரண்டு மன்றிச் சதசத்தாயுள்ள உயிராம்.

இரண்டனுள் ஒன்றனைப் பிரிக்கின்றமையிற் சத்தேயென்னு மேகாரம் பிரிநிலைக்கண் வந்தது. அசத்திலதாகலி னென்றுரைக்க. அசத்துச் சத்தையறியாமைக்கும் சத்தெதிர் சூனியமாதலே ஏதுவாத லமையுமாயினும், அசத்தெனப்பட்ட கருவிகள் முத்திநிலையிற் சிவ கரணமாய் ஆன்மசந்நிதியையொட்டி முதல்வன் சந்நிதியில் நிற்கப் பெறுமென்பாரை நோக்கி வேறுமோரேதுக்கூறினார். இக்கருத்தே பற்றி *"சத்தின்மு னிலாமை யானுந் தனைக்கொடொன் றுணர்த லானும்" என விரண்டேதுவும் உடன்கூறினார் வழிநூலாசிரியரும். ஏற்புழிக்கோடலான் அறிதலென்றது ஈண்டநுபவ வறிவின் மேற்று. இனைத்தெனவறிந்தபொருட்கு வினைப்படுதொகுதிக்கண் வேண்டப்படு முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. இதனுள் யாவை யுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தேயறியாதென்றது ஓரதி கரணம்; அசத்திலதறியாதென்றது ஓரதிகரணம்; இருதிறனறிவுள திரண்டலாவான்மாவென்றது ஓரதிகரணம்; ஆகமூன்றதிகரணத் தது இச் சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென்றது.

மே—†"தந்திடுஞ் சிவனவன்றன் சந்நிதி தன்னி னின்றே," ‡"கூடுமொளி யனர்குடிலை மாயை மேவி," "தாரகமா மதனன்றானிற் றல்" §"விமலனுக்கோர் சத்தியாய்" ¶"உலகமேயுருவமாக" ‖"அத்

---

* சிவஞானசித்தியார், எழாஞ்சூத்திரம். ௧. அனைத்துஞ்.

† ஷை, முதற்சூத்திரம். ௧௧. விந்துவின்.

‡ சிவப்பிரகாசம், பொது. ௨. நீடுபரா.

§ சிவஞானசித்தியார், இரண்டாஞ்சூத்திரம். ௫௩. நித்தமா.

¶ ஷை, ஐந்தாஞ்சூத்திரம். ௭. ‖ஷை முதற்சூத்திரம். ௫௧.

தோன்றுமாறுபோலச் சத்திலும் அசத்திலுஞ் சார்ந்ததன் வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோர் இயல்பாம்; ஆகலான், அஃதவை போலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையு மறியுமுகத்தான் அறியப்படுவதாம்.

ஆகலான் அஃதவைபோலத் தனித்தறியப்படுவதொன்றன்றி அவ்விரண்டினையுமறியுமுகத்தான் அறியப்படுவதாமென்பது குறிப்பெச்சம். சுட்டுணர்விற்கு விடயமாகாமைபற்றிச் சத்தை அருவென்றும் அதற்கு விடயமாதல்பற்றி அசத்தை உருவென்றுங் கூறினார். உணருருவசத்தென்புழி உருவென்றதும் அதுநோக்கி.

இழை நூலாகலான் ஈண்டுச் சாத்திரத்தை யுணர்த்திற்று. ஆய்தல் நுணுகுதல். *“ஒய்தலாய்தல் நிழத்தல் சாஅ - யாவயி னான்கு முள்ளதனுணுக்கம்” என்றார் தொல்காப்பியனாரும். ஆயிழையாவெனப் பொருளினுணுக்கம் நான்மேலேற்றப்பட்டது. உயிர்க்கு அறியுந்தன்மை யுண்டாகலானன்றே வேதாகமமுதலிய நூல்களுளவாயினவென அதனை வலியுறுத்துவார் ஆயிழையா யான்மாவென அதனையுடம்பொடு புணர்த்தோதினார். இக்கருத்தேபற்றி “பலகலையுலகி னிலவுதலாலும்” என்றார் புடைநூலாசிரியரும். இவ்வாறன்றி ஆயிழையாவென மகடூஉமுன்னிலை யாக்குவார்க்கு இவ்வுதாரணம் மேலதனை வலியுறுத்துதற்கெழுந்ததன்றாய்க் கூறியது கூறலென்னும் வழுவாய் முடியுமென்றொழிக.

மயக்கம துற்று மருந்தில் தெளிந்தும்
பெயர்ந்துணர்நீ சத்தாகாய் பேசில்—அசத்துமலை
நீஅறிந்து செய்வினைகள் நீயன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

உ—அங்ஙனமறியுமுயிர் சிவசத்தோடொப்பச் சித்தாகுமென்பாரை நோக்கி உபதேசியா வென்றதனைவலியுறுத்துதனுதலிற்று.

மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும் - நின்னறிவை விளக்குதற்குரிய வியஞ்சகமில்வழி ஒரு விடயத்தை இன்னதென்றறியமாட்டாது மயக்கத்தையுற்றும் பசிநோய்க்கு அன்னம்போல அம்மயக்க நோய்க்கு மருந்தாய வியஞ்சகமுள்வழி அம்மயக்க நீங்கி

* சொல்லதிகாரம், உரிச்சொல்லியல். -கூஉ.



அதனையின்னதென்று நிச்சயித்தும்,—பெயர்த்து உணர் நீ பேசில் சத்து ஆகாய் - இங்ஙனம் மாறி மாறியுணர்ந்து வருகின்ற நீ சொல்லுமிடத்துச் சிவசத்தோடொப்ப அறியுஞ் சத்தியுடையாயல்லை. அற்றேல் அசத்தனுவேன் போலுமெனின்,—நீ அறிந்து செய் வினைகள் நீ அன்றி வேறு அசத்துத் தான் அறிந்து துய்யாமை தான் அசத்தும் அலை - வியஞ்சகம் உள்வழியும் நீ முன்னறிந்து செய்த வினைகளை இப்பொழுது நீயேயறிந் தநுபவிக்கவல்லை யன்றி நின்னின் வேறாய் அசத்தாகிய பாசம் அறிந்தநுபவிக்கமாட்டாமையான் அதனோடொப்ப அசத்தனுவாயுமல்லை:—வேறு - சத்தகுணமுடைய ஆகாயம்போல வியஞ்சகமுள்வழி அறியுமாற்றலுடைமையும் அஃதில்வழி அவ்வாற்றலின்மையுமாகிய இரண்டுமுடைய நீ அவ்விரண்டற்கும் வேறாய்ச் சிதசித்தாந்தன்மையுடையை.

மருந்திற்றெளிந்தெனவே மயங்குதல் அஃதில் வழியென்பது பெற்றாம். வியஞ்சகமில்வழித் தலைப்படுவதூஉம் அஃதுள்வழி நீங்கி நிற்பதூஉமாகிய மயக்கம் உண்டியில்வழித் தலைப்படுவதூஉம் அஃதுள்வழி நீங்கி நிற்பதூஉமாகிய இயல்புடைய பசியோடொத்தலின் அதனைப் பசிநோயாகவும், தீர்த்த லொப்புமைபற்றி வியஞ்சகத்தைப் பசிதீர்க்குமருந்தாகவும் உருவகஞ் செய்தார்; இஃதேகதேசவுருவகம். மருந்தெனப் பொதுப்பட உருவகஞ் செய்தாராயினும் மறித்து மறித்து வேண்டப்படுமாறு ஈண்டைக்கேற்புடையது பசிநோய் தீர்க்கு மருந்தேயாகலின் அவ்வாறுரைக்கப்பட்டது. சத்தியுடைய பொருள் சத்தம், அஃதில்பொருள் அசத்தமாகலின், அவ்வடமொழிகள் ஈண்டம்முக் கெட்டுக் குற்றியலுகரவீறாய் நின்றன; “நாகணையான்;” “பெற்றொன்றுயர்த்த பெருமான்;” “பேது செய்து;” “வாது செய்த் திருவுள்ளமே” என்புழிப்போல. அசித்துமலையென்பது பாடமாயின், மேற்சத்தாகாயென்றதனை இசையெச்சமாகக் கொண்டு சத்தாந்தன்மையே யுடையாயல்லை; அதன் மேலுஞ் சித்தாமாறியாங்ஙனமென்றுரைத்து இயைத்துக்கொள்க. இவ்வாறன்றி ஈண்டுச் சத்தாகாய் அசத்துமலை யென்பவற்றை மேலருவுருவ மன்றாகுமென்றதன் பொருள்படக் கொண்டுரைப்பாருமுளர். அவர் ஆண்டேயமைந்து கிடந்தபொருளை மறித்துங் கூற வேண்டாமையும் பெயர்த்துணர் நீயெனவும் அறிந்து துய்யாமை

துவா மூர்த்தியாகி" *"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி-நின்ற வாறே" எனக் கூறப்படுமியல்புடைய பிரபஞ்சத்தைச் சத்தெதிர் சூனியமென்றல் அவசித்தாந்தமாய் முடியும்போலும் எனவும், †"மண்டிய வுணர்வுயிர்க்காய் மன்னி நின்றறறியும்" எனவுங் கூறுஞ் சிவாத்துவிதசைவர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றிற்போந்த ஏதுவைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

சுட்டுணர்வின்றி நின்றறியுஞ் சிவசத்தின் முன்னர்ச் சுட்டி அறியப்படும் அசத்தாய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாது ஈண்டுச் சூனியமென்றது விளங்காமைப்பொருட்டென்பார், பிரகாசியாதென்றார். இக்கருத்தே பற்றி ‡"முனைத்திடாதசத்துச் சத்தின் முன்னிருள்" என்றார் வழி நூலாசிரியரும், "முனைத்திடாமையாவது இது குடம் இஃதாடையென நம்மனோராற் சுட்டியறியப்படுமாறு போல முதல்வனாற் சுட்டியறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். ஆகவே, ஈண்டுச் சத்தெதிர் யாவையுஞ் சூனியமென்றது கொண்டு அவசித்தாந்தமாதல் யாண்டையதென மறுத்துச் சத்தறியாதென்றதனை வலியுறுத்தியவாறு காண்க.

## மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

ஏ—முற்றுணர்வுடைய சிவத்திற்கு அசத்தை விடயிப்பதாய சுட்டுணர்வும் உண்டென்றாற்படும் இழுக்கென்னை யென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

தன்னியல்பாகிய இயற்கையுணர்வின் முன்னர்ப் பொதுவியல்பாகிய செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையான் ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென மேற்கொண்டது.

பிரகாசித்துநிற்றலின்மையாவது இயற்கையுணர்வோடொப்ப ஒருங்குநில்லாமை. எக்காலத்து நிலைபெறுவதாய தன்னியல்பே மெய்யெனவும் இடையே தோன்றி மறைவதாய பொதுவியல்பே பொய்யெனவுங் கூறப்படுவனவாகலான் அவை ஈண்டைக் கேற்புடைய அறிவின்மேனின்றன. இஃதறியாதாருரைப்பனவெல்லாம் மேற்கோளைச் சாதித்தற்குரிய ஏதுவாதல் செல்லாது கூறியது கூறலாய் முடியுமென்றொழிக.

* திருநாவுக்கரசுநாயனார் தேவாரம், நின்றதிருத்தாண்டகம். ௧.
† சிவப்பிரகாசம், உண்மை. ௫௩. கண்டறி.
‡ சிவஞானசித்தியார், ஏழாஞ்சூத்திரம், ௧. அனைத்தும்.



அன்னியமில் லாமை அரற்கொன் றுணர்வின்றாம்
அன்னியமில் லான்அசத்தைக் காண்குவனேல்—அன்னியமாக்
காணான் அவன்முன் கதிர்முன் னிருள்போல
மாணா வசத்தின்மை மற்று.

உ—சுட்டுணர்வின்மையான் முதல்வன் அசத்தையறியானெனின் முற்றுணர்வுடைமைக் கிழுக்காமென்பாரை நோக்கி இழுக்கின்மை கூறி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

அன்னியம் இல்லாமை அரற்கு ஒன்று உணர்வு இன்று ஆம் - தன்னுள் வியாப்பியமான பசு பாசங்களோடு வேற்றுமையின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியக் கிடப்பதொன்றில்லை ஆகலான்—அன்னியம் இல்லான் அசத்தைக் காண்குவனேல் அன்னியமாக்காணான் - அத்தன்மையனாகிய முதல்வன் அசத்தையறியலுறுவனாயின் அறிந்தாங்கறிவனன்றி நம்மனோர்போல வேறாகச் சுட்டியறிவானல்லன்,—கதிர் முன் இருள்போல அவன் முன் மாணா அசத்து இன்மை மற்று-ஞாயிற்றின் முன் இருட்டுப்போல அம்முதல்வனெதிர் நன்மையில்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாதாகலான்.

எனவே, அசத்தை விடயிப்பதாகிய ஏகதேசவுணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃதில்லாமை முற்றுணர்விற்கு மேம்பாடாவதன்றி இழுக்காகாதென ஐயமகற்றி ஏதுவை வலியுறுத்தவாறு காண்க. மாணாமை வியாபகவுணர்விற்கு விடயமாகாமை. இன்மை ஈண்டு விளங்காமை குறித்து நின்றது. மற்றுக் காண்குவனேலென மேலேகூட்டி வினைமாற்றின்கண் வந்ததெனினுமமையும். கதிர்முன்னிருள் ஈண்டுமுனையாமை மாத்திரைக்கு ஒரு புடையுவமையாயிற்றென்பது வழிநூலாசிரியர் *"முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போல்" என்றவாற்றானறிக.

* சிவஞானசித்தியார், ஏழாஞ்சூத்திரம். ௧. அனைத்துஞ்.

# திருவண்ணாமலையில் அடுத்த ஆண்டு விழா

[பத்திராசிரியர்]

திருவதிகையில் சமாஜ ஆண்டு விழாவும் மகாநாடுகளும் மிகச் சிறப்பாக நடைபெற்ற முறையிலேயே அடுத்த ஆண்டு விழாவையும் அதைச்சார்ந்த மகாநாடுகளையும் தமது சொந்தச் செலவில் செவ்வையாக நடத்தி வைப்பதாக உறுதிகூறி, சமாஜத்தைத் திருவண்ணாமலைக்கு அழைத்த சைவத் திருவாளர் புரிசை முருகேச முதலியாரவர்கள் நன்றியைப் பெரிதும் பாராட்டுகிறோம். அவர்கள் சென்ற கார்த்திகை தீப உத்ஸவத்துக்கு நாம் அருணையம்பதிக்குச் சென்றிருந்த காலை தங்கள் கருத்தை சக்தி விலாச சபையில் நடந்த பெருங்கூட்டமொன்றில் தெரிவித்ததோடமையாது, திருவதிகை போந்து சமாஜ விழா முழுமையும் உடனிருந்து நடத்திச் சமாஜக் காரியக் கூட்டத்தில் அதனைப் பிரேரணை செய்து அவையினரை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்தார்கள். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் முதலிய பெரியார்கள் அவர்கட்கு அப்போது வாழ்த்துக் கூறினார்கள். அவர்கள் எல்லா நலங்களோடும் நீடூழி வாழ்ந்து இத்தகைய நற்செயல்கள் பலவற்றை நமது நாட்டினர்க்குமுன் மாதிரியாகச்செய்துகாட்டுமாறு இறைவன் துணை புரிக. அடுத்த ஆண்டு விழாவை அவர்கள் செம்மையாக நடத்தி முடிக்கத் துணைபுரியுமாறு உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவனை வழுத்துகின்றோம்.

# திருவெம்பாவை வகுப்பு

[காரியதரிசி]

சமாஜச் சார்பில், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்தஜன சபையின் குகானந்த நிலையத்தில், இவ்வகுப்பு மிகச் செம்மையாக 10-12-1934 முதல் 18-12-1934 வரை திரு. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களால் நடத்தப்பட்டது. பாவை நோன்பின் தன்மை, நோக்கம்,



இலக்கணம் முதலியவற்றை விளக்கி, ஆசிரியர் திருவெம்பாவையிலுள்ள பல நுட்பங்களை இலக்கியக் கண்கொண்டும் சமயக் கண்கொண்டும் ஆராய்ந்து பலபாடல்கள் சம்பாஷணை முறையில் அமைந்துள்ள வகையையும், சிறுமியர்கள் இன்னின்ன செயல்களோடு இன்னின்ன சொற்றொடர்களைக் கூறியிருத்தல் வேண்டுமென்ற வகையையும் தெளிவாகக் கூறி அவையினரை மகிழ்வித்தார்கள். சமாஜத்தின் சார்பில் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், திரு. பிள்ளையவர்கள் பாடமுறையைப் புகழ்ந்து பாராட்டி நன்றி கூறினார்கள்.

# நன்றியறி வாழ்த்து

[இளஞ் சைவப் புலவர் - சுப்பிரமணிய உடையார்]

**(பாரதியார் - தமிழ்மொழி வாழ்த்தின் சந்தம்)**

வாழ்க சைவம்! வாழ்க சித்தாந்தம்!
வாழிய தமிழ்மொழியே!
வாழ்க சமாஜம்! சித்தாந்த நிலை
வளவரும் வாழியவே!
வாழ்க ஞானியார்! வாழ்க தலைவர்!
வாழிய அமைச்சருமே!
வாழ்க சைவத் தேர்விற் பரிசுகள்
வழங்குவர் வாழியவே!
வாழ்க சமாஜத் தொண்டர் பலரும்!
வாழிய புரவலரே!
வாழ்க சைவர்! மங்கையர்! இளைஞர்!
வாழிய உறுப்பினரே!
வாழ்க சைவ சாஸ்திரம் வாழ்க!
வாழிய வையகமே!
வாழ்க சமாஜ முயற்சிகள் என்றும்
வாழிய வாழியவே!

யெனவும் அறிவுடைமை அறிவின்மைபற்றிக் கூறும் பொருள் அவை யாதல் செல்லாமையும் நோக்கிலர்.

மெய்ஞ்ஞானம் தன்னில் விளையா தசத்தாதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண்—மெய்ஞ்ஞானம்
தானே உளவன்றே தண்கடல்நீ ருப்புப்போல்
தானே உளமுளவாத் தான்.

உ—அம்மயக்கம் அவ்வுயிரோடியைபுடைய முதல்வனுக்குமுண்டு போலுமெனவும் அதுதான் உயிர்க்கு எக்காலத்து வந்ததெனவு நிகழுங்கடாவை விடுக்குமுகத்தான் இரண்டன்பாலு முளதாமாறு வலியுறுத்துதனுதலிற்று.

அஞ்ஞானம் - மேற்கூறிப்போந்த மயக்கமாவது, — மெய்ஞ்ஞானந் தன்னில் அசத்து ஆதல் விளையாது - ஒருபெற்றித்தாய அறிவெனப்படுஞ் சிவத்தினெதிர் கதிர்முன் னிருள்போல நிலையுதலிலதாகலின் ஆண்டுளதாதலின்றி,—மெய்ஞ்ஞானந் தானே உள அன்றே - அச்சிவம் என்றுள்ளது அன்றே,—தான் ஏய் உளம் உளவாத்தான் - தான் பொருந்துதற்குரிமையுடைய உயிர்களுள்ளனவாக,—உள்ளம் அணைதல் - அவ்வுயிர்களைப்பற்றி நிற்றல்,—தண் கடல் நீர் உப்புப்போல் காண் - தண்ணிய கடலின்கணுளதாதலின்றி அக்கடலிடத்துளதாகிய நீரைப்பற்றி நிற்கு முப்புப்போலென்றறிவாயாக.

இரண்டன்கண்ணும் உயிர்க்கியைபுடைமை கூறவே, இரண்டன் பாலு முளதாதலை வலியுறுத்தவாறு காண்க.

ஈண்டிருதிறனையுமறியுமறிவுளதெனவே இருதிறனுகிய சத்து அசத்து எனப்பட்டனவெல்லாம் *பிரமேயம் அவற்றை யறியுஞ் சதசத்தாகிய உயிர் பிரமாதா அவ்வுயிரினறிவாகிய சிற்சத்தி பிரமாணம் அவ்வறிவு நிகழ்ச்சி பிரமிதியென்பதூஉம், இருதிறனுல் விளங்குமறிவுளதெனவே அவ்விரண்டனுள் அசத்தானறிவு விளங்கும்வழித் தனக்கு வேருய் நின்று விளக்குவனவாய காட்சியனுமான முரையெனப்படும் அசத்தாகிய பாசஞானமூன்றுஞ் சத்தானறிவு விளங்

* பிரமேயம் - அறியப்படுபொருள்,—பிரமாதா - அறிபவன்,—பிரமாணம் - கருவி,—பிரமிதி - அறி[illegible] திராவிடமாபாடியத்திற் கண்டது.

## மதிப்புரைகள்

**திருவருணைக்கலம்பகம்** மூலமும் உரையும், விலை ரூ. 1/- பக்கம் 184. கிடைக்குமிடம்:—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 6, பவழக்காரத் தெரு, சென்னை. இந்நூல் சைவ எல்லப்பநாவலரியற்றியது; எங்கணும் சிவமணங்கமழ்வது; கலம்பகங்களுள் தலைசிறந்து விளங்குவது. இந்நூலுக்குத் திருத்தமான பதிப்பும் உரையும் இல்லையென்ற குறை நெடுநாளாக இருந்தது. அக்குறை இப்போது நீங்கிற்று. உரையாசிரியர் - திரு. ந. இராமலிங்கம் பிள்ளையவர்கள் மிக்க திறமையோடு சிறந்த மேற்கோள்காட்டி அரியதொரு உரையை இந்நூலுக்கு வகுத்துள்ளது பெரிதும் போற்றத்தக்கதே. இவ்வெளியீட்டில் திருத் தருமபுர ஆதீனத் தொடர்புள்ளதும் மிகப் பொருத்தமானதே. இந்நூலைச் சைவர் ஒவ்வொருவரும் வாங்குக.

**அருணகிரிநாதர் திருமுறைத் திரட்டு**, பக்கம் 400. விலை ரூ. 2, கிடைக்குமிடம்:—காஞ்சி - நாகலிங்க முனிவர், காமாட்சி விலாசம். கீழ்ப்பாக்கம், சென்னை. இந்நூல் மிகச் செம்மையாக அச்சிடப்பட்டுள்ளது. இதுவரை அருணகிரிநாதர் திருவாக்கு திருமுறையாக வகுக்கப்படாதிருந்த குறையை நீக்கி இந்நூல் ஆறு திருமுறைகளாக வகுத்துளது. நாடோறும் பாராயணத்துக்குரிய பல பாடல்கள் இத்திரட்டின்கண் உள்ளன. பாடல்களிலுள்ள கடினப்பகுதிகட்குக் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. குகனடியார் பலரும் வாங்குதற்குரிய நூல்.

---

**சிவாக்கிரபாடியம்** வடமொழி கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டது. பக்கம் 557. இன்று முதல் ஒருமாதம்வரை குறைந்த விலை ரூ. $1\frac{1}{4}$. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 11. உடனே சமாஜத்துக்கெழுதுக.

**பன்னிரு திருமுறைத் திரட்டு** 168 பாடல். மூலமும் குறிப்புரையும். பத்து பிரதிகள் ரிஜிஸ்தர் தபாற்கூலியுட்பட ரூ. 1-11-0. உடனே சமாஜத்துக்கெழுதுக.

• **சிவார்ச்சனைத் திருமந்திரம்** இருபது பிரதிகள் ரிஜிஸ்தர் தபாற்கூலியுட்பட ரூ. 1-8-0. சமாஜத்துக் கெழுதுக.

---

# பெரிய புராணம்

## சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு

தனிப்பிரதி விலை ரூ. 1— 6—0
ரிஜிஸ்தர் தபாற்கூலி 0—10—0

ஆறுபிரதிகள் விலை ரூ. 7— 8—0 தபாற்கூலி வேறு.

**பன்னிரு திருமுறைகள்** :—சமாஜப் பதிப்பு. ரயில்வே பார்சல் மூலம் அனுப்பத் தபாற்கூலி விலையுட்பட ரூ. 6. (ரயில்சார்ஜ் மட்டும் வாங்குவோர் செலுத்தவேண்டும்.)